மலர்-3 இதழ்-53 நவம்பர் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



நரகாசுரனை
பெற்றவர்களும்
கொன்றவர்களும்
தமிழர்களே..!

# 48 நாள்

## ஒரு மண்டலத்தின் விளக்கம்



## அற்புத கலை நயம்

ஜெயங்கொண்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் உள்ள கிணற்றிற்கு அருகில் ஒரு சிங்கத்தின் சிற்பம் இருக்கும். சிங்கத்தின் வாயில் ஒரு கதவு தென்படும்.

அதன் மூலம் கீழே இறங்கினால் கிணற்றில் குளிக்கலாம். ஆனால் மேலேயிருந்து பார்த்தால் நாம் குளிப்பது தெரியாது. இது மிகவும் அற்புத மான கட்டிடக் கலைக்கு ஒரு சிறு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

## நால்வர் அவதரித்த இடமும் அவர்கள் வாழ்ந்த காலமும்




| | |
|---|---|
| திருஞான சம்பந்தர் | சீர்காழி |
| திருநாவுக்கரசர் | திருவாமூர் |
| சுந்தரமூர்த்தி | திருநாவலூர் |
| மாணிக்கவாசகர் | திருவாதவூர் |

| | |
|---|---|
| திருஞான சம்பந்தர் | 16 ஆண்டுகள் |
| திருநாவுக்கரசர் | 81 ஆண்டுகள் |
| சுந்தரமூர்த்தி | 18 ஆண்டுகள் |
| மாணிக்கவாசகர் | 32 ஆண்டுகள் |



## முருகன்

- திருச்செந்தூரில் நடைபெறும் ஆவணித் திருவிழாவின் 7ஆம் நாள் விழாவில் தங்கப் பல்லக்கில் எழுந்தருளும் முருகப் பெருமான் முன்புறம் ஆறுமுகனின் தோற்றத்திலும், பின்புறம் நடராஜர் தோற்றத்திலும் காட்சி அளிப்பார்.
- கந்தபுராணத்தில் வரும் சுப்பிரமணிய ஸ்தோத்திரம் தினசரி அதிகாலையில் படிப்பவர்களது அனைத்துப் பாவங்களும் நிவர்த்தியாகும்.
- முருகப் பெருமானை வணங்கத் திதி, சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய், ஆகிய உகந்த நாட்கள் ஆகும்.
- முருகன் கங்கையால் தாங்கப்பட்டான். இதனால் காங்கேயன் என்று பெயர் பெற்றான். சரவணப் பொய்கையில் உதித்தான். ஆகையினால் சரவண பவன் என்று அழைக்கப்பட்டான். கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால் "கார்த்தி கேயன்'' என்றும் சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால் கந்தன் என்றும் பெயர் கொண்டான்.

www.aanmeegamalar.com







# சித்துக்கள்

சித்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சக்தியை பிரயோகித்து தங்களது சித்து வேலைகளை செய்துள்ளனர். பெரும்பாலும் மக்களின் நலனுக்காக மட்டுமே சித்துவேலை செய்தனர். அந்த வகையில் அவர்கள் பயன்படுத்திய சித்துக்களின் பெயர்களை பார்ப்போம்.

### அணிமா:

பெரிய ஒரு பொருளை தோற்றத்தில் சிறியதாகக் காட்டுவது/ஆக்குவது. ப்ரிங்கி முனிவர் முத்தேவர்களை மட்டும் வலம் வருவதற்காக சிறு வண்டாக உருமாறினார் என்ற செய்தி அணிமா என்ற சித்தைக் குறிக்கும்.

### மஹிமா:

சிறிய பொருளைப் பெரிய பொருளாக்குவது. வாமன அவதாரத்தில் திருமால் இரண்டடியால் மூவுலகை அளந்ததும், க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு உயர்ந்த வடிவம் காட்டி உலகமே தன்னுள் அடக்கம் என்று காட்டியதும் மஹிமா என்னும் சித்தாகும்.

### லஹிமா:

கனமான பொருளை இலேசான பொருளாக ஆக்குவது. திருநாவுக்கரசரை சமயப் பகை காரணமாக கல்லில் கட்டி கடலில் போட்டபோது கல் மிதவையாகி கடலில் மிதந்தது லஹிமா ஆகும்.




### கரிமா:

இலேசான பொருளை மிகவும் கனமான பொருளாக ஆக்குவது. அமர்நீதி நாயனாரிடம் கோவணம் பெறுவதற்காக இறைவன் வந்தபோது, ஒரு கோவணத்தின் எடைக்கு தன்னிடமுள்ள எல்லா பொருட்களை வைத்தும் தராசுத் தட்டு சரியாகாமல் கடைசியாக தானும் தன் மனைவியும் ஏறி அமர்ந்து சரி செய்த சித்தி கரிமா.

### பிராத்தி:

எவ்விடத்திலும் தடையின்றி சஞ்சாரம் செய்வது. திருவிளையாடற்புராணத்தில் "எல்லாம் வல்ல சித்தரான படலம்" என்னும் பகுதியில் சிவன் ஒரே சமயத்தில் நான்கு திசைகளிலும் காட்சியளித்ததாக வரும் சித்தி பிராத்தி.

### பிரகாமியம்:

வேண்டிய உடலை எடுத்து நினைத்தவிடத்தில் அப்போதே தோன்றுதல். அவ்வையார் இள வயதிலேயே முதுமை வடிவத்தைப் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தன்னுடைய அழகான பெண்வடிவத்தை மாற்றி பேய் வடிவம் பெற்றதும் பிரகாமியம் என்னும் சித்தாகும்.

### ஈசத்துவம்:

ஐந்து தொழில்களை நடத்துதல். திருஞான சம்பந்தர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியமை ஈசத்துவம் எனும் சித்தாகும்.

### வசித்துவம்:

ஏழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றைத் தம்வசப் படுத்துதல். திருநாவுக்கரசர் தம் மைக் கொல்வதற்காக வந்த யானையை நிறுத்தியதும், ராமர் ஆலமரத்திலிருந்து ஒலி செய்து கொண்டிருந்த பறவைகளின் ஓசையை நிறுத்தியதும் வசித்துவம் எனும் சித்தாகும்.

www.aanmeegamalar.com



# 48 நாள்

## ஒரு மண்டலம் என்பதின் விஞ்ஞான ரீதியான விளக்கம்



48 நாள்கள் விரதம் என்பது இந்துக்கள் தொன்று தொட்டு கடைபிடித்து வரும் ஒரு நடை முறை. இந்தவிரதமுறையில் நினைத்த காரியம் மட்டுமின்றி மனிதர்களின் பழக்க வழக்கங்களிலும் பெரிதும் மாற்றம் நிகழ்கிறது.

இதுஒரு அறிவியல் சார்ந்த விசயம். சூரியனிலிருந்துவெளிப்படும் கதிர்வீச்சுக்கள் சூரியஒளியாக நம்மைதொடுவதை நாம் ஏற்று கொள்கிறோம் அல்லவா? அது போலத்தான், நம் பூமியைச்சுற்றிலும் உள்ளகோள்கள், நட்சத்திர கூட்டங்கள் இவற்றிலிருந்துவெளிப்படும் கதிர் வீச்சுக்களும் நம்மேல் விழுகின்றன.

அறிவியல்பூர்வமாக சூரியனின் புற ஊதா கதிர்கள் நம் மீது படுவதால் ஏற்படும் பாதிப்புக ளையும் அதே நேரத்தில் சூரிய ஒளியின் மூலம் தான் அனைத்து உயிர்களும் பயன் பெற்று வாழ்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் அல்லவா? அதே போல் தான், நம்மை சுற்றிலும் உள்ள கோள்களின் மற்றும் நட்சத்திர கூட்டங்களின் கதிர் வீச்சுக்களும் நம் மீது தொடர்பு கொண்டுள்ளன என்பதை நாம் ஏற்றுகொள்ள வேண்டும்.

அவை இருக்கும் தூரத்தின் காரணமாகவும், அவற்றின் உருவ வேறுபாடு காரணமாகவும் அவை வெளியிடும் கதிர் வீச்சுக்களின் ஒளி சூரியனின் ஒளியைப்போல் நம் கண்களுக்கு தெரிவதில்லை.

இப்படிநம்மை வந்தடையும் கதிர்வீச்சு ஒளிக ளுக்கு சொந்தமான நட்சத்திர கூட்டங்களையும் மற்றும் கோள்களையும் 12 ராசி நட்சத்திர கூட்டங் களாகவும், 27 நட்சத்திர கூட்டங்களாகவும் மற்றும் 9 கோள்களாகவும் நம் முன்னோர்கள் கண்டுபிடித்து அதை வகைப்படுத்தி வைத்துள் ளனர். நாம்அன்றாடம் பயன் படுத்தும் தினசரி காலண்டரில், அந்த நாள் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்துக்கு மற்றும் ஒரு குறிப்பிட்ட ராசிக்கு உரியது என்று கொடுக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம் அல்லவா? அது போல வார நாட்களிலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிரகத்திற்கு உரியது என்பதை அதன் பெயர்களை கொண்டே நாம் அறியலாம்.

ஒருவருடத்தின் எந்த நாளை எடுத்து கொண்டாலும் சரி அன்றிலிருந்து தொடங்கி சரியாக 48 நாட்களுக்குள் 9 கிரகங்கள், ராசிக்கூட்டங்கள் மற்றும் நட்சத்திரக்கூட்டங்கள் இவைகளுடைய கதிர்வீச்சு ஆதிக்கம் பெற்ற அத்தனை நாட்களும் கணக்கில் வந்துவிடும்

எப்படி என்கிறீர்களா...?

கிரகங்கள் 9, ராசி கூட்டங்கள் 12, நட்சத்திர கூட்டங்கள் 27 இந்த மூன்றையும் கூட்டி பாருங்கள், 9+12+27=48.

எப்படி சூரியனின் கதிர்வீச்சு ஒளி இல்லா மல் உலகில் விவசாயமும் இன்னும் பல விசயங் களும் செய்ய முடியாதோ, அதே போல் இந்த மூன்று கூட்டமைப்புளின் மூலம் வெளிப்படும் கதிர்வீச்சுகளின் ஒளியும் நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நம் மீது பரவி நம்முடைய செயல்களுக்கு காரணமாக இருக்கின்றது என்பது அறிவியல் சார்ந்த உண்மை.

எனவேதான், தொடர்ந்து 48 நாட்கள் (ஒரு மண்டலம்) செய்யும் எந்த ஒரு செயலும் மேலும் மேலும் தொடர்ந்து வெற்றிகரமாக நடக்கின்றன. இதனால் தான் சித்த மருத்துவத்தில் கூட எந்த ஒரு இயற்கை மருந்தையும் ஒரு மண்டலம் சாப்பிடச் சொல்லுவார்கள். அப்படி செய்தால் அந்த நோய் நிரந்தரமாக குணமாகும். அதே போல் தெய்வீக காரியங்களை செய்யும் போது தொடர்ந்து 48 நாட்கள் செய்யும் வேண்டுதல்களும் (மற்றவர்களுக்கு தீமைகள் இல்லாத) கை கூடுகின்றன.

**சித்த மருத்துவத்தில் கூட எந்த ஒரு இயற்கை மருந்தையும் ஒரு மண்டலம் சாப்பிடச் சொல்லுவார்கள். அப்படி செய்தால் அந்த நோய் நிரந்தரமாக குணமாகும்.**

நம்முடைய முன்னோர் களான சித்தர்களும், முனிவர்களும் மிகச்சிறந்த அறிவியலாலர்கள்.

சபரிமலை ஐயப்பன் விரதமும் கூட இந்த வகையைச் சேர்ந்ததுதான். மாலை அணிந்து விரதம் இருக்கும் மெய்யன்பர்கள் காட்டில் வாசம் செய்வதற்கு தங்களைப் பழக்கிக் கொள்ளும் முறைதான் 48 நாள் விரதம்.

அக்காலத்தில் சபரிமலையில் இன்று உள்ளது போல் வசதிவாய்ப்பு கிடையாது. கரடு முரடான பாதை, மழை வெயில் போன்றவற்றிற்கு ஒதுங்க முடியாத இடம், சுவை, ருசி போன்ற உணவு கிடைக்காமை, மேலும் சுக போகம் இல்லாத ஒரு அடர்ந்த காடாகவும், ஐயன் சன்னதி மட்டுமே மேற்கூறையுடன் காட்சியளிக்கும்.

இப்படிப்பட்ட அடர்ந்த வனத்தில் ஐயனை தரிசிக்க செல்லும் ஐயப்ப பக்தர்கள் தங்களை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தயார் படுத்திக் கொள்ள கடை பிடித்த வழிமுறைதான் 48 நாள் விரதம்.

இந்த நாட்களில் வெறும் தரையில் படுப்பது, காலை, மாலை இரு வேளை குளிர்ந்த நீரில் குளிப் பது, ருசியற்ற உணவை உண்பது, உடல் உறுப்புகள் மீது கவனம் செலுத்தாமை, முடி, நகம் போன்றவற்றை வெட்டி அழகுப்படுத்திக் கொள்ளாமை, போன்றவற்றை 48 நாட்கள் கடைபிடித்து வந்தனர்.

இவ்வாறு ஒரு மண்டலம் காட்டில் வசிக்கும் வழிமுறைகளை கடைபிடித்து சபரிமலை செல்லும்போது, ஐயப்பனை தரிசிப்பது மிகுந்த சிரமமில்லாமல் எளிதாக இருக்கும்.

ஏதாவது ஒரு செயலயோ அல்லது வேண்டுதலயோ 48 நாட்கள் நம்பிக்கையோடு ஒரு முறை செய்து பாருங்களேன்....! அறிவியல் உண்மை விளங்கும்.



www.aanmeegamalar.com

# லக்ஷ்மி கடாட்சம் தரும் வாயிற் படி மரங்களும் பூஜையும்

பணம் என்பது நம் மனம் போல் இறைவன் உறையுமிடம், மனந்தனில் அழுக்கான எண்ணங் கள் சேர்ந்தாலோ, பணமானது லஞ்சம், புரட்டு, அதர்மமான முறைகளில் வந்தாலோ, மது, புகை, தீயொழுக்கங்களில் செலவழிக்கும் நோக்க மிருந்தாலோ, புனிதமான மனதை விட்டும், பணத்தை விட்டும் ஸ்ரீலட்சுமியோ, தெய்வமோ விலகி நின்றிடுவர்.

பண தேவதைகள் நம் இல்லத்து நிலை வாயிற்படிகளில் தான் உறைகின்றனர். ஏன்?

ஸ்ரீலட்சுமி தேவியை வரவேற்கவே! எனவே வாசலில் மட்டுமல்லாது சமயலறை, படுக்கை அறை, பூஜையறையென அனைத்திடங்களிலும் மரத்தாலான நிலைவாயிற்படிகள் வைத்து அவற்றிற்குச் செவ்வாய், வெள்ளி தோறும் தாமே அரைத்த மஞ்சள், சந்தனமிட்டுப் பழுத்த சுமநங்கலிகளைக் கொண்டு குங்குமமிட்டு வந்திடில், தரித்திர நிலைமை மாறி முறையான வழிகளில் பணம் கொழித்து ஸ்ரீலட்சுமி கடாட்சமும் நிறையும். மா, பலா, தேக்கு போன்று நிலைப்படி ரகசியங்களும் உண்டு.

நிலை வாசற்படிக்குக் காலை, மாலை, இரண்டு வேளைகளிலும் கோலமிடுதல் வேண்டும்.

மாம்பலகை நிலைப்படி மிகவும் விசேஷமானது. ஏனெனில் திருமகளின் வாகனம் ICHING எனப்படும் இரு கூட்டு மாங்கனிகளைப் போலி ருக்கும்.

மாம்பலகை நிலைப் படியெனில் ஹிருதயக் கமல புள்ளிக் கோலமும், பலாப் பலகையெனில் நட்சத்திரக் கோட்டு கோலமும், தேக்குப் பலகையெனில் கோபுர வடிவக் கோலமும் சிறப்புடையதாகும். ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு நட்சத்திரத் திற்கு உரித்தானது. ஆகையால் அந்தந்த நட் சத்திர மண்டல அமைப்பில் கோலமிட்டிடில் அந்த நட்சத்திர தேவ மூர்த்திகளே அதில் ஆவாஹனமாகி நம்மை மகிழ்ந்து ஆசிர்வதிக் கின்றனர்.

எப்போதும் பணத்தைச் சந்தனமரப் பெட் டியில் மல்லிகைப் புஷ்பத்துடன் சேர்த்து வைக்க வேண்டும். அணிகின்ற ஜீணீஸீமீன் பின்பையிலோ, இடுப்பிலோ பணத்தைச் செருகுதல் கூடாது. பெருமாளின் மார்பில் ஸ்ரீலட்சுமி உறைவது போல சட்டையின் மேல் உள்பாக்கட்டில் பணத்தை வைத்திடுக! பெரும் பணம், லாபம் வரும் போது சம்பளம் வந்ததும் முதன் முதலாக பால், உப்பு போன்ற விருத்தியடையும் பொருட்களை வாங்கிடுக! தாய் அல்லது மனைவியிடம் முதலில் சம்பளப் பணத்தைத் தருதல் சிறப்புடையது.

– ஜோதிட ஆசான் மு.கிருஷ்ணமோகன்
போன்: 8526223399





aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ–புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர் .காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ–புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்

# வேத பாடசாலைக்கு உதவிய கல்கத்தா காளி



1960ல், காஞ்சி மகாபெரியவர் கல்கத்தாவில் முகாமிட்டிருந்தார். தினமும் ஆயிரக்கணக்கான வங்காளி பக்தர்கள், பெரியவரைத் தரிசனம் செய்து சென்றனர். அங்கு வசித்த நரசிம்மன் என்ற பக்தர், பெரியவரின் தீவிர பக்தர்.

ஒருநாள், தனது வழக்கமான பூஜைகளை முடித்த பெரியவர், பக்தர்களுக்கு தரிசனம் தர தயாரானார். அங்கிருந்த நரசிம்மனை அழைத்து, "நரசிம்மா! கல்கத்தாவில் ஒரு வேத பாடசாலை நிறுவ விரும்புகிறேன். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வேதாந்த மாணவர்கள் படிக்க, தங்க எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இந்தப் பணிக்கு நீயே பொறுப்பேற்க வேண்டும், ஏற்றுக் கொள்வாயா?'' என்று கேட்டார்.

நரசிம்மன் பெரியவரின் உத்தரவை அப்படியே சிரமேற் கொள்வதாக தெரிவித்தார்.

இதன்பிறகு, பாடசாலை அமைப்பதற்குரிய பல இடங்களைப் பார்த்தனர். ஒரு குறிப்பிட்ட இடம், நரசிம்மனுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் பிடித்திருந்தது. ஒரு வங்காள தம்பதிக்கு சொந்தமான இடம் அது. நரசிம்மன், தனது நண்பர் ஒருவருடன் அவர்களது வீட்டுக்குச் சென்றார். வேதபாடசாலை நிறுவ, அந்த இடம் வேண்டும் என அவர்கள் அந்த தம்பதியிடம் கேட்டனர்.

பெரியவரின் உத்தரவுப்படி நிறுவப்படும் வேத பாடசாலை என்பதால், அந்த தம்பதிக்கு மிக்க மகிழ்ச்சி. இடத்தைத் தருவதாக உறுதியளித்து விட்டனர். பத்திரம் பதிவதற்காக, ஒரு குறிப்பிட்ட நாளில், அவர்களை வரச் சொன்னார்கள்.

அவர்கள் சொன்ன நாளில், நண்பர்கள் இருவரும் வங்காள தம்பதி வீட்டுக்குச் சென்றனர். ஆனால், திடீரென அவர்கள், தற்போது தங்களால் அந்த இடத்தைத் தர முடியாது என மறுத்து விட்டனர். நண்பர் கள் இருவரும், அவர்களது முந்தைய வாக்குறுதியை நினைவுபடுத்தினர். ஆனால், அவர்கள் வருந்தும் வகையில் சிலவார்த்தைகளையும் சொல்லி, வெளியே அனுப்பி கதவையும் தாழிட்டு விட்டனர்.

ஆனாலும், நண்பர்கள் மேலும் சிலமுறை அந்த தம்பதியரை அணுகினர். ஆனால், காரியம் நடக்கவில்லை. இதற்குள் காஞ்சிக்கு சென்று விட்ட பெரியவரைச் சந்தித்து, இடம் கிடைக்கவில்லை என்று சொல்ல எண்ணி, மறுநாள் காலை 7 மணிக்கு சென்னை விமானத்தில் கிளம்ப திட்டமிட்டனர். அப்போது, பெரியவர் சென்னை சமஸ்கிருத கல்லூரியில் முகாமிட்டிருந்தார். அவரைச் சந்தித்து விபரத்தைச் சொன்னார்கள்.

அதைக் கேட்டுக்கொண்ட பெரியவர், "நீங்கள் மாலை 5 மணி விமானத்திற்கு உடனே கல்கத்தா புறப்படுங்கள். நாளை காலை அந்த வீட்டிற்குச் செல்லுங்கள். அங்கு போய் வந்த பிறகு, என்ன நடந்ததென்று சொல்லுங்கள்,'' என்றார். அவர்களும் அன்றே கல்கத்தா பறந்தனர்.

மறுநாள் காலையில் மகாபெரியவரை மனக் கண்ணால் தரிசித்து விட்டு, அந்த வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினர். என்ன ஆச்சரியம்!



அந்த தம்பதிகள் இவர் களை வரவேற்று நமஸ்கரித்தனர்.

"நேற்று இரவு எங்கள் இருவர் கனவிலும் காளி தோன்றினாள். வேதபாட சாலைக்கே இடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னாள். அந்த இடத்தை நாங்கள் உங்களுக்கே தருகிறோம்,'' என்று கண் ணீர் மல்கக் கூறினர்.

நரசிம்மன் நண்பர்களுக்கு மிகுந்த ஆச்சரியம்!

""உன் வீட்டுக் கதவைத் திற, வங்காளிகளின் உயிர் மூச்சான காளி உள்ளே வருவாள். உங்களுக்கும் அருள்வாள், உலகத்திற்கும் நன்மை செய்வாள்,'' என்று மகா பெரியவர் மூலமாக அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோ!'' என்று நெகிழ்ந்து போனார்கள்.

– நன்றி: பெரியவா மகிமைகள்


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



# அதிக பணம் கர்வத்தை தரும்

யோகி ராம்சுரத்குமார் அவர்கள் ஒருசமயம் தனது சீடனிடம்.

“ராமலிங்கம்”

“சாமி”

“ராமகிருஷ்ண பரமஹம்சர் தெரியுமா? அவரு நிறைய கதை சொல்வாரு”

“ஆமா சாமி”

“அதுல ஒருகதை இந்த பிச்சைகாரனுக்கு ஞாபகம் வருது”

“சொல்லுங்க சாமி”

“ஒரு தவளை சேற்றில் வளை தோண்டி வாழ்ந்து வந்தது. அதனிடம் ஒரு ரூபாய் நாணயம் இருந்தது. அதை தன் சேற்று வளையில் வைத்து, வெகு கவனமாய் தவளை காவல் காத்து வந்தது. அந்த வழியே, வளை அதிர ஒரு யானை போயிற்று.

தவளைக்கு ஒரே கோபம். யானையை எட்டி உதைப்பது போல, கால் நீட்டி வீசியது.

“ஏய்..உன் மனதில் உன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எட்டி நான் ஒரு உதை விட்டால் என்ன ஆகும் தெரியுமா” என்று கத்தியது. யானைக்கு காதில்விழவேயில்லை. வெகுதூரம் போய்விட்டது.

“யானை மறுபடி வரட்டும், நான் யாரென்று காட்றேன்” என்று மறுபடி தவளை கத்தியது.



www.aanmeegamalar.com





# கேசவன் செய்த மரியாதை



மனிதர்களாக பிறந்த ஒருசிலர் யாருக்கு எவ்வாறு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். உதாரணத்திற்கு கடவுளுக்கு என்ன மரியாதை தர வேண்டும் என்பது ஒருசில அதி புத்திசாலி களுக்குக் கூட தெரிவதில்லை.

ஆனால் குருவாயூர் கோயில் கேவன் மிகுந்த புத்திசாலி, கோவிலில் நடைபெறு விஷேச நாட் களில்... குருவாயூரப்பன் படத்துடன் தன்மேல் ஏறும் முகம் தெரியாத நபரைக் கூட, முன்கால் வழியாக அனுமதிக்கும்.

ஆனால் வேறெப்போதும் தன் பாகனைக் கூட... முன்கால் வழியாக தன்மேல் ஏற அனுமதித்ததில்லை. கேசவனை பொறுத்தவரை... முன்கால் மரியா தை என்பது குருவாயூரப்பனுக்கு மட்டுமே. கடைசிவரை அதில் உறுதியோடு வாழ்ந்து மறைந்தது.

அதனாலேயே... குருவாயூர் கோயில் சார் பாக, கோயில் வளாகத்தில்... கேசவனுக்கு பிரம் மாண்டமான சிலை நிறுவப்பட்டுள்ளது!!!

“கதை எப்படியிருக்கிறது ராமலிங்கம்”

“தமாஷா இருக்குங்க சாமி”

“என்ன தமாஷ்”

“யானை பலமெங்கே, தவளை பலமெங்கே, லேசா யானையோட கால் பட்டா தவளை கூழ்கூழா போயிடும், ஆனால் கத்துது”

“தவளை ஏன் கத்துச்சு குலோத்துங்கன்?”

“தெரியல சாமி”

“உனக்கு தெரியுமா ராமலிங்கம்?”

“அதனுடைய குணம் சாமி”

“இல்லை, அதுகிட்ட ஒரு ரூபாய் இருந்ததால உண்டான கர்வம்”

“ஆமா சாமி, மனுசாள்கிட்ட கொஞ்சம் பணம், கொஞ்சம் புத்தி, கொஞ்சம் அறிவு, கொஞ்சம் திறமை இருந்தா போதும், ரொம்ப கத்துவாங்க”

“எப்படி கத்துவாங்க குலோத்துங்கன்”

“நான் யாருன்னு காட்டுறேன் பாருன்னு”

“கரெக்ட்”

“கடவுளுக்கு முன் நாமெல்லாம் தவளைகள். அவர் கொடுத்த புத்தி, அவர் கொடுத்த செல்வம், அதுவே அத்தனை கர்வம் தருமா? ஆனால் தருகிறது. Some people are like that”



# பிரபஞ்சத்தின் படைப்பு

ஈஸ்வரன் இந்த பிரபஞ்சத்தை படைத்தார் என்றால் அதற்கான பொருட்கள் எங்கு இருந்தது?

எதிலிருந்து இவை அனைத்தையும் படைத்தார் என கேட்பதுண்டு. ஈஷ்வர நிலை என்பது இறைநிலையின் முதல் நிலை. இதை பற்றி விரிவாக பின்பு விளக்குகிறேன்.

ஓர் சிலந்தியை கவனித்தீர்கள் என்றால், தானே தனது வலையை உருவாக்கி அதன் மையத்தில் அமர்ந்துவிடுகிறது.

அது போல தன்னையே உலகாக்கி, அண்ட சராசரமாக்கி அதன் மையத்தில் ஈஸ்வர நிலை இருக்கிறது. சிலந்திக்கு தனது வலையை உருவாக்கும் பொருள் எங்கிருந்து கிடைத்தது? தன்னிலிருந்து எடுத்து தனக்காக உருவாக்கியதை போல, இறையாற்றல் தன்னிலிருந்தே அனைத்தையும் உருவாக்கியது. மீண்டும் ஒரு நாளில் அனைத்தையும் தன்னகத்தே எடுத்து ஒன்றாகி விடும். இதையே படைப்பு மற்றும் பிரலயம் என வழங்கப்படுகிறது.

இதை எப்படி உனக்கு தெரிந்தது? என கேட்கலாம். அந்த பிரம்மாண்டமான சிலந்தியின் ஓர் இழைதானே நானும்? அதற்குள்ளே இருந்து வந்ததால் என் மூலத்தை உணர்ந்தேன். அதனால் தெளிந்தேன். நீங்களும் முயற்சி செய்யுங்கள், நீங்கள் நான் அது என அனைத்தும் ஒன்று என உணர்வீர்கள்.

இறைவன் பிரபஞ்சத்தில் பூமியை படைத்து அதில் மட்டும் மனிதர்கள் வாழவைத்தான். ஏன் வேறு இடத்தில் உயிரினம் இல்லை.?

இது உங்கள் அறியமையை காட்டுகிறது. இந்த பிரபஞ்சத்தின் பிற பகுதியில் உயிரினங்கள் இல்லை என எதை வைத்து முடிவு செய்தீர்கள்? சூரிய மண்டலத்தை விட்டு இன்னும் மனித இனம் தாண்ட வில்லை. சில மத நூல்கள் , கடவுள் மனிதனை அழைத்து அவனுக்கு பூமியை உருவாக்கிருப்பதாக சொன்னார் என்கிறது. அப்பொழுது அதற்கு முன் மனிதன் எங்கே இருந்தான்? அடிப்படை நிலையில் இருப்பதாலும், அறியாமையாலும் இந்த கருத்து வெளிபட்டுள்ளது.

பஞ்சபூதங்கள் உயிர் உருவாக்கதிற்கு காரணம் எனும் பொழுது, பிரபஞ்சத்தில் எந்த புள்ளியில் ஐபூதங்களும் சந்திக்கிறதோ அங்கு உயிர் தோற்றம் நிகழும். அவர்களும் நம்மை போல் இருக்க வேண்டும் என்பது இல்லை. வேறு மாதிரியும் இருக்கலாம். எவ்வாறு வேறு மாதிரி என்கிறீர்களா? உங்களை போன்று அறியாமையில் இல்லாமல், நல்ல ஞானத்துடன் இருக்கலாம்.

நமது பிறப்பின் கர்மவினைக்கு முற்பிறவியின் செயல் காரணம் என்றால், இதை பின்னோக்கி பயணித்தோம் என்றால் முதன் முதலில் ஓர் பிறப்பு எடுத்திருப்போம் அல்லவா? அதற்கு எந்த கர்மவினை காரணம்? கேள்வி கேட்டவர்

நாம் யார் நாம் எங்கிருந்து வந்தோம் எனும் தேடல் இல்லாத காரணத்தால் இக்கேள்விக்கு பலருக்கு விடை தெரியவில்லை. இதற்கு முன் சொன்ன கேள்வி பதில் இதை தெளிவாக்கும் என்றாலும் வேறு கோணத்தில் இதை விளக்குகிறேன்.

யோக வாஷிஷ்டம் எனும் நூல் இதற்கான தகுந்த விளக்கத்தை


www.aanmeegamalar.com

தருகிறது.அதில் இருக்கும் ஓர் கதையை எளிய வடிவில் பதிலாக அளிக்க விரும்புகிறேன்.

சிவன் தியானத்தின் உச்சநிலையான சமாதி நிலையில் இருக்கிறார். தனது நிலை கலைந்து வெளியே வரும்பொழுது பரமாத்மா முன் ஓர் தேனீ ரீங்காரம் இடுகிறது. அதை கண்ட பரமாத்ம சொரூபம் தேனீயாக உருவெடுக்கிறது.

தேனீ பல இடங்களுக்கு சென்று தேனை சேகரிக்கிறது. அப்பொழுது அழகிய மலர் ஒன்றை பார்க்கிறது. தேனீ ஓர் மலராக மாற்றம் அடைகிறது. மலர் மணம் கமழ இருக்கும் சூழ்நிலையில் அதை பறித்து கோவிலுக்கு கொண்டு செல்கிறார்கள். அங்கே மலர் அர்ச்சனைக்காக கொண்டு செல்லப்பட்டு கருவறையில் இருக்கும் சிவலிங்கத்தின் மேல் அர்ச்சிக்கப்படுகிறது. மலர் தன்னிலை மீண்டும் உணர்ந்து சிவனாகிறது.

முதல் முதல் பிறவியில் நாம் இறைவனாகவே இருந்தோம். அந்த நிலை பிறப்பாலும் , நான் எனும் இருப்பாலும் மறக்கடிக்கபடுகிறது.

யோக வாஷிஷ்டம் என நான் குறிப்பிட்ட நூல் வஷிஷ்ட முனி ஸ்ரீராமருக்கு கூறிய ஞான கருத்துக்கள்.வஷிஷ்டர் ஸ்ரீராமனிடம் சொல்கிறார் " நீ பரமாத்மா எனும் நிலை மறந்து இருக்கிறாயே அந்த தூக்கத்திலிருந்து வெளியே வா". மாபெரும் இறைநிலையின் அவதாரத்திற்கே இந்த கதி எனில் நம் நிலையை எண்ணிபார்க்க வேண்டும்.

ஆணவத்துடன் நானே இறைவன் எனும் தன்மையை உணரும் பொழுது அரக்க குணம் ஏற்படுகிறது. பக்தியுடன் இதை உணரும் பொழுது அங்கே ஞானம் பிறக்கிறது. நமது தர்மத்தில் இறைவனை தவிர அன்னியமாய் எதுவும் இல்லை. ஹிரண்ய கசிப்பு, கம்சன், ராவணன் என இறைவனுக்கு எதிராக செயல்படுவர்கள் எவரானாலும் அவர்களின் நிலை உணரவைக்கப்பட்டு இறுதியில் இறைவ னுடன் இணைந்துவிடுவார்கள். காரணம் அவர்களும் இறைவனின் சொரூபமே.பிற மத கருத்துக்களை போல சாத்தான் என்ற எதிர் இயக்கம் கடவுளுக்கு அன்னியமாய் போர் செய்து கொண்டு இருக்க படைக்கப்படவில்லை.

தத்வமஸி, அஹம் பிரம்மாஸ்மி என்ற மஹாவாக்கியங்கள் உணர்த்தும் செய்தியும் இதுதான். நாமும் நம்மை கடந்து சென்றால் நமது சொரூ பத்தை உணரலாம் அப்பொழுது நமது முற்பிறவி மட்டும் அல்ல முழுமுதற் பிறவியையும் உணர முடியும்...!!!

மு.கிருஷ்ண மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கும் சப்பாத்திக் கள்ளி

உலகில் உள்ள மருத்துவத்தில் மிகவும் பழமையானது நமது சித்த வைத்திய முறை, ஆனால் ஒருசில சுயநலவாதிகளால் சித்த வைத்தியமுறை முழுவதுமாக நமக்கு கிடைக்காமல், கிடைக்க விடாமல் செய்து விட்டனர்.

எந்த வித கருவிகளின் துணையின்றி மனிதனின் மண்டை ஓட்டை பிளந்து அறுவைசிகிச்சை செய்து காட்டியது நமது சித்த வைத்திய முறை தான்.

மருந்துகள் இன்றி நாம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே ஒருசிலவற்றை கடைபிடித்து மருத்துவம் கண்டு சாதனை படைத்தவர்கள் நமது முன்னோர்கள்.

அந்த வகையில் குழந்தை இல்லாத பிரச்சனையை தீர்க்க ஒருசில எளிய சாப்பாட்டு வழி முறைகளில் வைத்தியத்தை செய்துள்ளனர்.

குழந்தையில்லாதவர்ளுக்கு, குழந்தை பாக்கியம் தருவதற்காக, நம்ம ஊரு கிவி பழம் என்று சொல்லக்கூடிய சப்பாத்திக் கள்ளி பழத்தையே அரு மருந்தாக பயன்படுத்தியுள்ளனர்.

சப்பாத்திகள்ளிபழம் நல்ல சிவப்பு நிறத்தில் இருக்கும். இந்த பழத்தை எவரும் எடுத்துச் சாப்பிடுவது இல்லை. ஏனென்றால் இதில் உள்ள முள் யாரையும் நெருங்க விடாது.

ரோஜாவை காப்பாற்ற முள் இருப்பது போன்று இந்த பழத்தை பாதுகாக்க பல மடங்கு முள் இருக்கும். அதனால் துரட்டிக் கொண்டு இந்த பழத்தை பறிப்பார்கள்.

இந்த கள்ளி பழத்தை பறித்ததும், அப்படியே சாப்பிடமுடியாது. அந்த பழத்தின் மேல் கண்ணுக்கு தெரியாத பூமுள் ஆயிரக்கணக்கில் இருக்கும். அதனால் துணியில் எடுத்து அந்த பழத்தை தரையில் உள்ள கல்லில் தேய்த்து மேலே உள்ள முள்ளை போக்க வேண்டும்.

பின் கவனமாக பழத்தை பிரித்தால் உள்ளே, நட்சத்திர வடிவில் தொண்டை முள் இருக்கும். அப்படியே சாப்பிட்டால் தொண்டையில் அந்த முள் சிக்கி வலியை ஏற்படுத்தும்.

அந்த தொண்டை முள்ளை எடுத்து வெளியே போட்டு விட்டு, உள்ளே உள்ள பழத்தை மட்டும் சாப்பிட வேண்டும். இதில் அதிக விதையும், நல்ல இனிப்பு சுவையும், நல்ல சிவப்பு நிறமும் கலந்து இருக்கும்.



இந்தப் பழம் குங்குமப் பூவை விட மிகச் சிறந்தது.

இந்த பழத்தை சாப்பிட்டால், இதயம் சீராக துடிக்கும், இரத்த விருத்தி உண்டாகும், ஆணுக்கு அனுக்கள் அதிகரிக்கும், பெண்களுக்கு கரு முட்டை நன்றாக வளரும், கருவுற்ற பெண்கள் இந்த பழம் சாப்பிட்டால் குழந்தை நல்ல சிவப்பு நிறத்துடனும், ஆரோக்கியத்துடனும், இருக்கும். வாரத்தில் மூன்று முறை இதனை எடுத்துக் கொண்டால் நீர்கட்டி தானாக அழியும்.(இதனை எடுக்கும்போது பெண்கள் இனிப்பு பதார்த்தங்களை சாப்பிடக்கூடாது. நன்றாக நடைபயிற்சி செய்ய வேண்டும்) எல்லோருக்கும் நல்லது செய்யும் பழம் இது.

பல ஆயிரம் செலவு செய்து தற்கால மருந்து மாத்திரைகளால் அளிக்கப்படும் சிகிச்சைகளால் பலவித உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் நம் இயற்கை தந்துள்ள அற்புத மருத்துவ முறைகளில் எந்த வித சிக்கலுமின்றி அனைத்து நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் உண்டு என்பது பல்வேறு காரணங்களால் மறைக்கப்பட்ட தால் இன்றைய தலைமுறைக்கு இது போன்ற அறிய எளிய வைத்திய முறைகள் தெரிந்தவர்கள் அவர்களுக்கு எடுத்துச் சொல்வதால் நமது இயற்கை மருத்துவ முறை காப்பாற்றப்படும்.






அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# மாயையிலிருந்து இறைவனால் தான் நீங்கள் பாதுகாப்பாக உள்ளீர்கள்

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "கடந்து செல்லும் வாழ்க்கைக் கனவுகளில் பற்று வைக்காதீர்கள். இறைவனுக்காக மட்டுமே வாழுங்கள். இந்த உலகில் விடுதலை மற்றும் பாதுகாப்பு பெற இது ஒன்றுதான் வழி. இறைவனுக்கு வெளியே வேறு எங்கும் பாதுகாப்பு இல்லை; நீங்கள் எங்கு சென்றாலும் சரி, மாயை உங்களை தாக்க முடியும். இப்பொழுதே விடுதலை பெறுங்கள். இப்பொழுதே நீங்கள் இறைவனின் புதல்வனாக இருங்கள். நீங்கள் அவன் குழந்தை என்பதை உணருங்கள். என்றென்றைக்குமாக இந்த மாயைகனவிலிருந்து விடுபட்டிருப்பீர்கள். ஆழ்ந்தும் விசுவாச மாகவும் தியானம் செய்யுங்கள். ஒரு நாள் இறைவனுடன் பரவசத்தில் விழிப்புற்று மக்கள் தாங்கள் துன்புறுகிறோம் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதைக் காண்பீர்கள். நீங்கள், நான் மற்றும் அவர்கள் அனைவரும் தூய மெய்பொருள். பகவான் கிருஷ்ணன் கூறினார். "இல்லாததற்கு இருப்பு இல்லை. இருப்புது இல்லாமல் போவதில்லை. இவ்விரண்டினுடைய உண்மையும் ஞானி களுக்கு விளங்கும்." (பகவத் கீதை அத்.2 ஸ்லோகம் 16)

ஒவ்வொரு நாளும் நான் உங்களை சந்திக்க முடியும். ஆனால் அவை, நீங்கள் எவற்றைக் கேட்கிறீர்களோ அவற்றை நீங்கள் பயிற்சி செய்தாலொழிய உங்களுக்கு அவசியம் உதவி புரியும் என்றாகாது; இந்த ஞாயிறு கூட்டங்களில், ஒரு வாழ்நாளில் நீங்கள் எங்கேயும் எப்போதும் கற்க முடி யாதவற்றை நான் உங்களுக்குக் கூறியுள்ளேன். இந்த சத்சங்கங்களுக்கு வருவதன் மூலம் மாயையின் தளைகள் எவ்வாறு அறுக்கப்படமுடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் யோகதா சத்சங்கப் பாடங்களை வீட்டில் படித்து அவற்றை விசுவாசத்துடன் பயிற்சி செய்யுங்கள். ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த தனிப்பட்ட முயற்சியை இறைவனிடம் மீண்டும் திரும்புவதற்கு பயன்படுத்த வேண்டும்.

இதற்கு மாறாக உங்களிடம் பேசும் எவரும் உண்மை யைப் பேசவில்லை. நீங்கள் தானாக இறைவனைக் காண்பதற்கான முயற்சி எடுக்கும்போது மட்டுமே இறைவன் உங்களுக்கு உதவிபுரியமுடியும். குரு தேவர் உங்களுக்கு உதவி புரிய முடியும். வேறு எவரோ உழைப்பதை கவனிப்பதன் மூலம் நீங்கள் பணம் பெற முடியாது. அதற்காக நீங்கள் உழைக்க வேண்டும். இறைவனைக் காண்பதற்கான உங்கள் உழைப்புதான் உங்களை இறைவனிடம் எடுத்துச் செல்லும். எனவே இப்பொழுதே உங்களது மிகச்சிறந்த முயற்சியை மேற்கொள்ளுங்கள். உங்கள் இரவுகளை தியானத்திற்காக ஒதுக்குங்கள். இடையீடற்ற கவனத்துடன் தியானம் புரியுங்கள். இயந்திரத்தனமான பிரார்த்தனை என்ற அவமதிப்புக்கு இடம் இருக்கக்கூடாது. உங்கள் ஆன்மாவை இறைவனுக்கு அர்ப்பணியுங்கள். பிறகு உங்கள் வாழ்க்கை அதன் ஒவ்வொரு நிமிடமும் ஒரு வியக்கத்தக்க இருப்பாக மாறுவதை நீங்கள் காண்பீர்கள்."

மொத்தமாக நம் வாழ்க்கையை இறைவனிடத்தில் அர்ப்பணம் செய்து, இறை விதிமுறைகளை அறிந்து கடை பிடித்தால் எப்பொழுதும் இறைவன் நம்முடன் இருப்பான். அதுமட்டுமின்றி அவன் அனைத் தையும் நமக்கு உணர்த்திக்கொண்டிருப்பான் என்பதற்கான குருதேவரின் அருள்வாக்குகள், இறைவனை உண்மையாகவே தேடுகின்ற ஓர் இறைபக்தனுக்கு பயனளிக்கிறது.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த வாழ்க் கை மிகவும் கடினமானது. நமக்கு எப்பொழுதும் இறைவன் மட்டும்தான் பாதுகாப்பு;வேறு எதனாலும் பாதுகாப்பு இல்லை; எனவே இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடையவர் இவ்வுலகில் வாழ்வது என்பதை விளக்கிகூற இயலாது. இறைவன் ஒவ்வொருவருக்கும் உறவி னர்களையும் உடமைகளையும் அருளியுள்ளான். அதற்கேற்றவாறு எங்ஙனம் வாழவேண்டும் என்ப தற்கான விதிமுறைகளையும் அருளியுள்ளான்.

ஆனால் இக்காலகட்டத்தில் உறவினர்களாக இருப்பவர்கள் எவரையும் எவ்வகையிலும் அதாவது இறைவனின் அனுமதியும் அருட்கடாக் ஷமும் இருந்தாலொழிய திருப்திப்படுத்த இய லாது என்பது உண்மை.



அதே சமயம் தவறு இழைக்கின்றவர்களிடத்தில், "நீ செய்வது தவறு அதை மேலும் செய்யாதே" என்று கூறினால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாதையை தேர்ந்தெடுத்து பயணம் செய்துகொண்டிருக்கின்றனர். மனம் போன போக்கில் சென்றுகொண்டிருக்கின்றனர். அவர்கள் கூறும் வார்த்தைகளையும் அவர்களின் செயல்பாடுகளையும் அவர்களே தமக்குச் சாதகமாக்கி நியாயப்படுத்திக்கொள்கின்றனர்.

அதை யாராலும் தடுக்க முடியாது. அவர் களுடைய எண்ணம் என்னவென்றால், "நாம் பூமியில் பிறவியெடுத்து வந்துவிட்டோம்; மூன்று வேளையும் நன்றாக சாப்பிடவேண்டும்; ஆடம் பரமாக வாழவேண்டும்." என்ற எண்ணங் களுடன் அதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். இதுதான் இக்கால மனிதர்களின் லட்சியம். தவறு செய்பவர்களுக்கு, தாம் செய்வது பெரிய தவறாக இருந்தாலும் அதை தவறாக நினைக்கமாட்டார்கள்.

ஆனால் இறைவனை நேசிக்கின்ற, இறை ஏக்கம் கொண்ட, அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்து, இறைவிதிமுறைகளைக் கடை பிடித்து இறைவனை அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் இறைவனுக்காக வாழ்ந்து கொண்டு அவனைத் தேடுகின்ற ஒருவனின் கண்களுக்கு அது பெரிய தவறாகவே தெரியும்.

மாறாக இறை விதிமுறைகளை மதிக்காத, அவற்றைப் பின்பற்றாத உலகப் பொருட்களுக் காக வாழுகின்றவர்கள் இறை விதிமுறைகளைக் கருத்திற்கொள்ளமாட்டார்கள். வினையின் விளைவினை அனுபவிக்கும்பொழுதுகூட தாம் செய்த தவறினை உணரமாட்டார்கள். உண்மைக்கு சக்தி உண்டு என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

இறைவனை மனபூர்வமாக நேசிக்கின்ற மனிதர்கள் நன்மை தீமைகளை பகுத்தறிகின்ற விவேகம் உடையவர்களாக இருப்பார்கள்.

அதனால் அவர்கள் இறைவனால் வழி காட்டப் படுபவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தவறுகள் இழைக்க மாட்டார்கள். இவர்கள் இறைவிதிமுறை களுக்கேற்ப வாழ்பவர்கள்.

ஒரு சிலர் தியானத்தால் இறைவனை அடைவதற்கு தீவிர ஏக்கம் கொண்டு தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டிருப் பார்கள். இவ்வாறான ஒரு தீவிர

45
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர்.காம்

பக்தன் பிறரை தவறாக எண்ணினாலோ அல்லது பேசினாலோ அடுத்த வினாடியில் அல்லது அடுத்த சில மணி நேரங்களில் தாம் எண்ணியதும் பேசியதும் தவறு என்பதை இறைவன் பக்தனுக்கு உணர்த்துவான்.

உணர்த்துவது மட்டுமின்றி யாரை தவறாக நினைத்தானோ அவர்களுக்குள்ளும் இறைவன் உறைந்திருக்கிறான்' என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டி அவர்களிடத்தில் அன்பு கொள்ளக் கற்றுத்தருகிறான் இறைவன்.

இந்த உண்மையை, இறைவன் தன் பக்தனுக்கு ஏற்கனவே உணர்த்தியிருப்பான். இருப்பினும் இவ்வுலகம் அறியாமையினால் பொதியப்பட்டுள்ளதால் மாயை உள்ளே புகுந்து அனைத்திலும் அனைவருள்ளும் இறைவன் நிறைந்திருக்கிறான் என்ற உண்மையை மறக்க வைக்கிறது.



அதை மறக்கும்பொழுது மனம் மாறுகிறது. மனம் மாறும்பொழுது, தவறான எண்ணங்கள் உட்புகுந்து அவனுடைய இயல்பை மாற்றுகிறது. அதையும் இறைவனேதான் செய்ய வைக்கிறான். அது அவனுக்கு இறைவன் தருகின்ற சோதனை.

இறுதியில், அவையெல் லாம் இறைவனின் சோதனை யாகயிருந்தாலும் அவை பக்தனை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காகவும் மாற்றிக் கொள்வதற்காகவும் இறைவன் அருளும் சோதனை என்பதை புரிந்துகொண்டு பக்தன் தன் தவறை உணர்ந்து பின்னர் இறைவனிடத்தில் மன்னிப்புக் கேட்டு தன்னை ஒழுங்குபடுத்திக்கொண்டு மாற்றிக்கொள்கிறான்.

அப்பொழுது இந்தக் கனவுவாழ்க்கையிலுள்ள பற்றிலிருந்து விடுபடவேண்டும் என்பதை உணர்கிறான். அது ஆழ்ந்த தியானத்தால் மட்டும்தான் முடியும் என்பதையும் இறைவன் உணர்த்துகிறான். இறைவன் தன் அன்பிற்குரிய பக்தனிடத்தில் "உன்னை நீ" சுய ஆராய்வு செய்துகொள்' என்ற அறிவுரை கூறி பக்தனை பரிசுத்தமாக்குகிறான் என்பது பொருள். ஒழுக் கத்தை கற்றுக்கொள்ளும் வகையில் பக்தனை திசை திருப்புகிறான். இந்த நடைமுறை ஒரு தீவிர இறைபக்தனுக்கு மட்டும் தான் தெரியும். இந்த பக்தனைப் போன்ற மனமுடைய பிற இறை பக்தர்களுக்கும் இறைவன் இதே போன்ற நடைமுறையை பின் பற்றச்செய்வான். இது சராசரி மனிதனுக்குத் தெரியாது; புரியாது. உண்மையான இறைபக்தன் மாயை நதியைக் கடந்து சென்று கொண்டிருப்பான். பின்னர் பற்று என்ற நோய் அவனை விட்டுவிலகும். இறுதியில், தன் வாழ்க்கையில் ஏற்படுகின்ற அவன் எல்லாக் கொடுமைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றான்.





குருதேவர் அருளியுள்ளார்: "இரும்பை நெருப்பில் வெண்மை நிறம் ஆகும்வரை சூடேற்றினால் ஒழிய நீங்கள் எஃகு தயார் செய்ய முடியாது. அது தீங்கு செய்வதற்கல்ல. துன்பமும் நோயும் நமக்கு ஒரு பாடம் கற்றுக்கொடுக்கின்றன. நம்முடைய வேதனையான அனுபவங்கள் நம்மை அழிப்பதற்காக உண்டாவதில்லை. ஆனால் நம்முடைய அஞ்ஞானக்குப்பை எரிப்பதற்காகவும் நம்மை வீட்டிற்கு வேகமாகத் திருப்பி அழைத்துச் செல்வதற்காகவும்தான். நம்முடைய முக்திக்கு இறைவனைத் தவிர வேறு யாரும் அதிக ஆர்வத்துடன் இல்லை".

எவ்வளவுக்கெவ்வளவு துன்பங்கள் நம்மை ஆக்கிரமிக்கின்றனவோ. அவ்வளவுக்கவ்வளவு நம் ஆத்மா தூய்மையாகின்றன. எல்லாம் நம் கர்மாதான். இருப்பினும் என்ன துன்பம் வந்தாலும் அவற்றை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். புயலுக்குப் பின்னே அமைதி' என்ற பழிமொழிக்கேற்ப, கடின துன்பங்களுக்குப் பின்னர் அமைதியாகி நம் சொந்த வீடான இறைவனின் சாம்ராஜியத்திற்குச் செல்லத்தான் உள்ளோம்.

மாயை எனும் மூடு பனியால் பொதியப் பட்டுள்ள, இவ்வுலகம், "அறியாமை" எனும் பெருங்கடலில் மிதந்து கொண்டிருக்கின்றது. தியானத்தால் அத்வைத ஞானசூரியன் உதயமாகும்பொழுது (இறைவன் பக்தனை ஆட்கொள்ளும்பொழுது) இந்த மாயை எனும் மூடுபனி உருகி இறைவனாகின்ற பெருங்கடலில் கரைந்து விடுகிறது.

மாயை ஒவ்வொருவருடனும் இருக்கின்றது. உலகத்தைப் புரிந்துகொள்வதற்கான மனப் பக்குவம், அதாவது அனைத்துலகமும் உலகப் பொருட்களும் மாயை என்பதை உணரும் பொழுதுதான், இந்த மாயைக்கு மேலான, அழிவற்ற ஒரு சக்தி இருக்கிறது என்ற உண்மையை இறைவனே உணர்த்துவான்.

அவ்வாறு இறைவனை உணருகின்றவர்களால் மட்டும்தான் அழிவற்ற உலகப்பொருட்களை மனப்பூர்வமாக புறக்கணித்து இறைவிதிகளை மட்டும் கடைபிடிக்க இயலும். அப்பொழுது இறைவன் நம்முடன் இருப்பதை உணரமுடியும். பரம்பொருளான இறைவனைத் தவிர வேறு எந்தப் பொருளும் நமக்கு பாதுகாப்பில்லை என்பதையும் உணரமுடியும்.

'ஜெய் குரு'

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909



ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# தீபாவளியின் தத்துவம்



ஐப்பசி மாதம் அமாவாசை முன் 2 நாட்களில் இருந்து, அமாவாசையின் அடுத்து இரண்டு நாட்கள் வரை மிகவும் சக்தி வாய்ந்த நாளாக வேத நாட்காட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐப்பசி அமாவாசை தினம் அன்று தீபாவளி கொண்டாப்படுகிறது. வருடத்தின் மிக இருண்ட இரவு அந்நாள். மேல் சொன்ன ஐந்து தினங்களில் நட்சத்திரங்களில் சக்தி பூமியின் மீது பரவலாக இருக்கும். அமாவாசை தினம் அன்று. இந்த சக்திகளில் இருந்து கடவுள்களின் சக்தி ஈர்க்கப்படும். குறிப்பாக மகாலக்ஷ்மி சக்தி மிக பரவலாக இருக்கும்.

பொதுவாக தீபாவளி தினம் அன்று லக்ஷ்மி தேவி படம் முன் விளக்கு வழிபடுவது வழக்கம். அதாவது இருளைப் போக்க விளக்கு ஏற்றி ஒளிரச் செய்வதாக அர்த்தம். தீபாவளியின் அர்த்தம் “தமஸோமா ஜோதிர்கமைய’ என்ற ஸ்லோகத்தில் புதைந்துள்ளது. இதன் அர்த்தம் “என்னை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு எடுத்துச் செல்”. இங்கு வெளிச்சம் என்பது உள்ஒளி. மாறாக வீட்டில் விளக்கு ஏற்றுவதோ, இல்லை மின் விளக்கு எரிய விடுவதோ அல்ல. எப்போது உள் ஒளி பெருகுகிறது, அப்போது தேவ தேவியர்கள் ஈர்க்கப்படுவார்கள். இந்த விசேஷ நாளில் குறிப்பிட மந்திர உச்சாடனம் செய்யும் போதும், சனாதன் கிரியாவின் மேல் நிலை பயிற்சிகளை செய்யும் போதும் நம்முள் உள் ஒளி பெருகும்.

படைப்பில் இருக்கும் பல வேறு சக்திகள், அதாவது பல ரூபங்களில் நம் வழிபடும் கடவுள்கள் , நம்மை சரியான வழியில் நடத்தி செல்வதற்க்கே உள்ளன. பூமியில் அவர்கள் ஆற்றல் பரவி இருப்பதற்கு வேறு எந்த காரணமும் இல்லை. ஆத்மாவின் உண்மை தேவையை பூர்த்தி செய்ய அவர்களை அழைக்கும் போது, அவர்கள் செவி சாய்ப்பர்கள். உள் அனுபவத்தை ஏற்படுத்துவார்கள்.

லக்ஷ்மி தேவி காக்கும் கடவுளின் சக்தி. இவளுக்கு மாயா என்றும் பெயர் உண்டு. செல்வத்தின் கடவுள் ஆனா இவள், புற செல்வதிருக்கும்அதை விட அக செல்வத்திருக்கும் இவளே அதிபதி. மன தூய்மையோடும், சரியான வழிபாட்டுடனும் இவளை அழைக்கும் போது, அந்த சாதகருக்கு பொருள் செல்வத்தையும், ஆன்மீக சித்திகளையும் வழங்குவாள். ஆனால் நமது என்ன என்பதில் தெளிவு வேண்டும். பொருள் சேர்ப்பதை விட, ஆன்மீக அனுபவங்களை உள்வாங்கி அதன் மூலம் மேலே உயர வேண்டும்.

மாயா என்பது நம்மை புற பொருட்களோடு கட்டி போடும். காலையில் இருந்து இரவு வரை நம்மை அதில் சிக்க வைக்க முயற்ச்சி செய்யும். ஆசைக்கு எல்லையே கிடையாது. அதில் இருந்து வெளி வந்து நாம் உயர வேண்டும் என்கின்ற எண்ணம் வேண்டும். செல்வங்களை தேட நினைத்து நீங்கள் எவ்வளவு செல்வங்கள் தேடினாலும் உங்களால் தன்னிறைவு பெறவே முடியாது. நீங்கள் தன்னிறைவு பெற முயற்சித்துக் கொண்டே இருக்கும் வேளையில் நீங்கள் உடலை விட்டு பிரிந்து விடுவீர்கள். மீண்டும் இன்னொரு பிறவியில் மறுபடியும் மாயையில் சிக்கிக் கொள்வீர்கள்.

ஒன்றை நீங்கள் மறக்கக் கூடாது, அனைத்து புறப் பொருட்களும் தற்காலிகமானவை. அவை உங்களுடன் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே இருக்கும். அவை உங்களை விட்டு செல்லும் போது உங்களிடம் மிஞ்சி இருப்பது வலி மட்டுமே. நீங்கள் எவ்வளவு சேர்க்கிறீர்களோ, அவ்வளவு மன பாரங்களையும் சேர்த்து வைத்து உள்ளீர்கள். அதை விட மிகவும் வலியை தாங்க வேண்டி இருக்கும்.

ஆன்மிக மாதமிருமுறை இதழ்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

இந்த தருணமே தீர்மானித்து விடுங்கள். மீதம் இருக்கும் உங்கள் நேரத்தை சரியாக உபயோகிக்க. உங்கள் புற செல்வங்களின் மீது பற்றை விட்டு, மேல உயர வேண்டும். நீங்கள் சேர்த்து வைத்திருப்பதில் இருந்து இந்த படைப்புக்கு திருப்பி கொடுங்கள். சேவை மற்றும் தொண்டு மூலமாக.

வான் நோக்கி செல்லும் ராக்கெட், மேல செல்ல வேண்டும் என்றால் தன் பின்னால் இருக்கும் தேவை அற்ற சுமைகளை இறக்கி விட வேண்டும். இது நமக்கும் பொருந்தும். தீபாவளியின் முக்கியத்துவம் “எனக்கு மேலும் மேலும் பொருள் தா” என்பதில் இல்லை. “என் தேவைக்கு செல்வம் கொடு, ஆனால் என்னை பற்றில் அகப்படாமல் காத்து ரக்ஷிப்பாய் தேவி. ஏன் என்றால் இவை அனைத்து நிரந்தரம் இல்லாதவை” என்பது தான். நீங்கள் கண்டிப்பாக புற பொருட்களை அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அதில் பற்றை விடுத்தது அதை அனுபவிக்க வேண்டும். தேவைக்கு மேலும் மேலும் சேர்க்கும் எண்ணம் சரி அல்ல.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பதை போல, படைபிற்கு இரண்டு பக்கம் உண்டு, அதில் ஒன்று இருண்ட பாதை. அதாவது மாந்த்ரீகம் போன்ற எதிர்மறை சக்திகள். தீபாவளி என்பது வருடத்திலேயே மிகுந்து இருள் சூழ்ந்த நாள். இந்நாளில் செய்யும் மாந்திரீக வித்தைகளுக்கு சக்தி அதிகம்.

இது போன்ற சக்திகளில் இருந்து காத்துக் கொள்ள, சனாதன் கிரியா பயிற்சி செய்து குருவுடன் உங்களை இணைத்துக் கொண்டால், குருவின் சக்தி உங்களை இது போன்ற எதிர் மறை சக்திகளை நீக்கி விடும். இந்த தீபாவளியில் இருந்தே உங்களை ஒளிர செய்ய ஆரம்பித்து விடுங்கள்....வாழ்த்துக்கள்....

– யோகி அஷ்வினி.

www.dhyanfoundation.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# விசுவம், தைஜஸம், பிராஞம்

ஒரு மகானின் நடை, உடை, பாவனை மூன்றையும் கவனித்து பார்க்க வேண்டும். பகவானைப் பற்றிய நிரந்தர அபிப்ராயம்...

'விசுவம், பிராஞும், மற்றும் தைஜஸம்' என்ற மூன்று நிலைகளில் பகவான். அகில உலகத்தில் பகவான் பரவியிருக்கிறான். பழ மரங்கள் எல்லா பாகங்களிலும் இருக்கின்றன. பழ மரங்கள் நிறைய காய்க்கும் பழ மரங்கள் இருக்கின்ற இடத்திற்கு வௌவால்கள் வரும் . பழ மரம் நாடி வரும் வௌவால்கள் போல், மீனாட்சியை நாடி வரும் பக்தர்கள் ஏராளம்.

மீனாட்சி பாதம்! மீனாட்சி பாதம் ! மீனாட்சி பாதம்! அது ஒன்றையே குனிந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். மீனாட்சி யின் பெருமையை பேசும் படி எல்லாக் காவியங் களையும் படைப்பாள். நீங்கள் மீனாட்சி அம்பாளை பார்த்து இருக்கிறீர்களா?

அதுபோல நடை. மகான்களின் நடை எந்த வண்ணம் பகவானை நாடிப் போகிறது? என்று பார்க்க வேண்டும். எந்த பகவானை பாவனை செய்கிறார்கள்? ஆராதிக்கிறார்கள்? என்பது தெரிந்து கொள்ள வேண்டும்.

'விசுவம்' என்பது பெரிய நிலை. இரண்டு கண்களும் எங்கும் பரவி இருக்கின்ற பகவானை பற்றிக் கொண்டு இருக்க வேண்டும். அப்போது பகவானைப் பற்றி தெரிந்து கொண்டுவிடுவீர்கள்.ஒரு சமயமும் விட்டுப் போகாது. பகவான் விசுவரூபமாக பரவி இருக்கிறான்... விசுவேஸ்வரன் எல்லா இடத்திலும் இருக்கிறான் என்ற சொல் 'விசுவம்'.

பிராஞன்' (பாதங்களை) பற்றிக் கொண்டு இருப்பது... அதிகப் பிரகாசமாக இருக்கின்ற மூளை.. விசுவமாக இருக்கின்ற சர்வேசுவரன்/ மீனாட்சி. (அப்போது) 'தைஜஸம்' என்பது நம்மிடம் வெளிப்படும். இது ஒரு அவஸ்தை.

'விசுவம்' என்பது பகவானின் அவஸ்தை. பகவான் எல்லா இடத்திலும் இருக்கின்றதை பார்க்க வேண்டும். இந்த அவஸ்தையை உணர்வது மூளைதான். எல்லா இடத்திலும் பரவி இருக்கின்ற பரமேஸ்வரனை எடுத்துச் சொல்வது..இது 'தைஜஸம்'.

'பிராஞன்' எங்கு கூப்பிட்டாலும் உங்கள் நினைவு மீனாட்சியைப் பற்றிக் கொண்டே இருக்கும்..'பிரஞை' என்கின்ற நிலை. 'விசுவம், தைஜஸம், பிராஞும்' இந்த பகவத் அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டும். இந்த அவஸ்தைகளை மகான்கள் ஆகி அனுபவிப்பீர்கள்.

(27-06-2010 ஞாயிறு ஞானகளின் அருளுரையிலிருந்து)



– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து
தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## சீடன் கேள்வி - ஞானி பதில்

**சீடன்:** ஆத்மபலம் ஏன் அனைவருக்கும் இல்லை?

**ஞானி:** ஆத்ம முழுமையுடன் தான் அனைவரும் பிறக்கின்றனர். ஆத்ம அங்கஹீனம் ஒரு வருக்குமில்லை. உடல் அங்கஹீனம் இருக்கலாம். எல்லா அங்கங்களுக்கும் ஆண்டவனுடைய சக்தியை வேண்டும் மனிதன், மனதிற்கு அதை சரியாக கேட்ப தில்லை. அதனால் அது வழி தடுமாறி கடவுளை விட்டு அகலுகிறது. ஆத்மபலம் கிடைப்பதில்லை.

**சீடன்:** நிறைய படிக்கிறேன், கேட்கிறேன். திருப்தி வரவில்லையே?

**ஞானி:** எல்லாவற்றையும் படித்துவிட்டு ஜீரணிக்க முடியவில்லை என்றால் வாயு வந்து உள்ளத்தில் போராட்டம் தான். ஏப்பம் என்பது ஜீரணிக்க முடியாமல், ஏப்பம் வராவிட்டால் திருப்தி இல்லை என்று பொருள். அந்த கல்வி செத்த கல்வி, சாகக் கூடிய கல்வி.

**சீடன்:** தங்கள் பிராச்சாரத்தினால் திருப்தி ஏற்படுகிறதா உங்களுக்கு?

**ஞானி:** நன்றாக சமைக்க வேண்டும் என்பது போல் பிரச்சாரம் என்பது கடமை. திருப்திக்கு காரணமானது கடவுளையே நேசிக்கும் மனம்.

**சீடன்:** பக்திக்கு எது முக்கியம்?

**ஞானி:** நீ விரும்புகிற கடவுள் எண்ணம் விருப்பம் என்பது தான் தெய்வ அருளுக்கு அடிப்படை.

**சீடன்:** இறைவனைப் பற்றி கேட்க எது முக்கியம்?

**ஞானி:** உன் காதுகள். அபிப்ராயம் இருந்தால் தான் எந்த விஷயத்தையும் காது கொடுத்து கேட்பார்கள்.

**சீடன்:** குருநாதரிடம் ஏன் பற்று வருகிறது?

**ஞானி:** சொல்லாத விஷயத்தை அவர்கள் சொல்வதால், கடவுள் விஷயத்தில் நீ கொள்ளாத அனுபவத்தை அவர்கள் ருசித்திருப்பதால்.

# தீபாவளிக்கு முந்தைய நாள் யம தீபம் ஏற்றுங்கள்!



தீபாவளிக்கு முந்தைய தினத்தன்று யம தீபம் ஏற்றுவது நம் மரபு.

யம தீபம் ஏற்றினால் குடும்பம் விருத்தியாகும். தொழில் முன்னேறும். திருமணத் தடைகள் விலகும், சொத்துகள் சேரும். அனைத்துவிதத் தடைகளும் நீங்கி, வாய்ப்புகள் தானாகவே வரும்.

மாஹாளய பட்சத்தில் பூலோகத்துக்கு உங்கள் முன்னோர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு மாஹாளய அமாவாசை அன்று நீங்கள் திதி கொடுத்து இருப்பீர்கள்.

அப்படி வந்த அவர்கள் மீண்டும் திரும்பிச் செல்வதற்கு வெளிச்சம் காட்டுவது "யம தீபம்" மட்டுமே. அத் தீபத்தை நீங்கள் தீபாவளி காலத்தில் வருகிற திரயோதஸி திதியில் ஏற்ற வேண்டும்.

இது எப்போதும் தீபாவளிக்கு முதல் நாள் அன்று வரும்.

யம தீபம் ஏற்றி ஹிந்து பலிதானிகளுக்கும், முன்னோர்களுக்கும் வழிகாட்டி உதவுவது அந்த வருடம் முழுவதும் நல்ல பலன்களைத் தரும்.

யம தீபமானது துர்மரணம் அடைந்தவர்களுக்கு முக்கியமானது. அவர்கள் பிரச்சினைகள் ஏற்படுத்துவதை நிறுத்திவிட்டு, உங்களுக்கு நலன்களைச் செய்வார்கள்.

சாத்திரப்படியான யம தீபம் ஏற்றும் முறை:

1. உங்கள் வீட்டின் உயரமான பகுதியில் யம தீபம் ஏற்றப்பட வேண்டும்.
2. தெற்கு திசை நோக்கி விளக்கு எரிய வேண்டும்.
3. விளக்கேற்றிய பின்னர், இந்து பலி தானிகளையும் உங்கள் முன்னோரையும் மனதில் ஓரிரு நிமிடங்கள் சிந்திக்க வேண்டும்.
4. பின்னர்க் கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்ல வேண்டும்.

ஶ்ரீ யமாய நம: யமாய தர்ம ராஜாய
ம்ருத்யவே சாந்த காயச
வைவஸ்தாய காலாய ஸர்வ பூத க்ஷயாயச
ஔதும்பராய தத்னாய நீலாய பரமேஷ்டினே!
வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாய வை நம:
சித்ரகுப்தாய வை ஓம் நம இதி:

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# முருகனின் சிறப்புகள்...



- முருகனுக்கு பல பெயர்கள் உள்ளன, அதில் வேலன், கந்தன், சுப்பிரமணியன், கார்த்திகேயன், சரவணபவன், குமரன், சண்முகன், தாரகாரி, கிரௌஞ்ச போதனன், சக்திதரன், தேவ சேனாபதி, சேனாதிபதி, காகவாகனம், மயில் வாகனன், சேனாளி, பிரம்ம சாஸ்தா, பாலசுவாமி, சிகிவாகனன், வள்ளி கல்யாண சுந்தரன், அக்கினி ஜாதன், சாரபேயன், குகன், பிரம்மசாரி, தேசிகன், காங்கேயன் ஆகியவை முருகனின் வேறு பெயர்களாகும்.
- கந்தப் பெருமானின் புகழ் சொல்லும் நூலான "திருப்புகழ்'' நூலினை இயற்றியவர் அருண கிரிநாதர்.
- "முத்தமிழால் வைதாரையும், வாழ வைப்பான் முருகன்'' என்று அருட்கவி அருணகிரி பாடியுள்ளார்.
- அக்கினி, இந்திரன், வருணன், பிரகஸ்பதி, ஹிரண்ய கர்ப்பம் ஆகியோரின் கூட்டுக் கலவையே முருகன் ஆவான்.
- அதர்வண வேதத்தில் முருகன் அக்கினியின் புதல்வன் எனவும், சதமத பிராமணத்தில் ருத்திரனின் புதல்வன் எனவும் சித்திரிக்கப்பட்டுள்ளான்.
- யானை மேல் வீற்றிருக்கும் முருகன் உருவம் மாமல்லபுரத்துப் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளது.
- கதம்ப அரசர்கள் கார்த்திகேயனை வழிபட்டனர்.
- முருகப் பெருமானின் திருவருளால் சாப விமோசனம் பெற்ற பராசர முனிவரின் ஆறு புதல்வர்கள் தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி முதலியோர் இவர்கள் மீனாய் இருந்து, முருகன் அருளால் மீண்டும் மனிதர் ஆகினர்.
- முருகனின் கையில் உள்ள வேல் இறைவனின் ஞானசக்தி எனப் பெயர் பெறும்.
- முருகனே திருஞான சம்பந்தராய் அவதாரம் செய்தார் என்று பலர் பாடியுள்ளனர்.

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.
www.aanmeegamalar.com

# கெடுதல் செய்யும் அனைவரும் நரகாசூரன்

இரண்யாட்சன் என்ற அரக்கன் வேதங்களை எடுத்துச் சென்று பாதாள லோகத்தில் மறைத்து வைத்துவிட்டான். அதனை மீட்டெ டுக்க மகா விஷ்ணு பாதாளம் நோக்கி சென்று அசுரனுடன் போரிட்டு அவனை வென்றார். அப்போது பூமாதேவியுடன் ஏற்பட்ட பரிசத்தினால் பூமாதேவி பவுமன் என்ற மகனைப் பெற்றெடுத்தார்கள். அந்த பவுமன் சாகாவரம் வேண்டி பிரம்மதேவரை நோக்கி கடும் தவம் செய்து, பிரம்மதேவரிடம் பெற்ற தாயைத் தவிர வேறு ஒருவரால் மரணம் ஏற்படாது என வரம் பெற்றான்.

பிற்காலத்தில் அந்த அசுரன் மனிதர்களுக்கு எதிராக கொடுமைகள் செய்து மனிதர்களுக்கு பல இன்னல்களை கொடுத்தான், நரன் என்று மனிதர்களை அக்காலத்தில் அழைப்பார்கள். நரன் களுக்கு துன்பம் கொடுத்த அசுரன் என்பதால் அவன் நரகாசுரன் என அழைக்கப்பட்டான்.

தேவர்கள், மனிதர்கள், மற்றும் பிற உயிரினங்களுக்கு நன்மை செய்பவர் கள் அனைவரும் தேவர் என்றும், மேற்கண்ட வர்களுக்கு துன்பம் விளைவிப்பவர்கள் அசுரர் கள் என்றும் வரையறுக்கப்பட்ட காலம்தான் புராண காலம்.

புராணக்காலப்படி மகாவிஷ்ணுவுக்கு பூமா தேவிக்கும் பிறந்த அவன் மேற்கண்டவர் களுக்கு தீமைகளை மட்டும் செய்ததால், இறைவனுக்கு பிறந்தவனாக இருந்தாலும், அசுர குலத்தில் சேர்க்கப்பட்டான்.

(தற்போது ஒரு கூட்டம் அசுரர்கள் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று வீணாக விதன்டாவாதம் செய்து கொண்டிருக்கின்றனர். புராணக்காலத்தில் இது போன்று எந்தவித பாகு பாடும் கிடையாது.

நன்மை செய்பவர்கள் தேவர்களாகவும்,தீமை செய் பவர்களை அசுரர்களாகவும் வரையறுக்கப்பட்டது அக் காலத்தில்)

மகாவிஷ்ணுவின் கிருஷ்ணாவதாரத்தில் பூமாதேவி சத்யபாமாவாக அவதரித்து கிருஷ்ணரை மணந்து கொண்டார். மனித அவதாரத்தில் சத்ய பாமா விற்கு நரகாசுரன் தனது மகன் என்ற நினைப்பு மறந் திருந்தது.



நரகாசுரனை வதம் செய்ய கிளம்பிய கிருஷ்ணர் தோரோட்டுவதிலும், விற் போர், வாட்போர் போன்றவற்றில் வல்லவரான சத்யபாமாவை தனது தேரை ஓட்டும்படி பணித்தார்.

நரகாசுரன் உடன் நடந்த சண்டையில் கிருஷ் ணர் காயமடைந்து மயங்கடைந்தது போல நடித்தார். தனது கணவரின் நிலை கண்டு கடும் கோபம் கொண்ட சத்யபாமா நரகாசுரனை எதிர்த்து போர்செய்து அவனை அழித்தார். அப்போது தான் அவன் தனது மகன் என அவர் தெரிந்து கொண்டார்.

(அவதாரம் வேறாக இருந்தாலும், உண்மையில் விஷ்ணுவுக்கு, மகாலட்சுமிக்கும் பிறந்த நரகாசுரனை தற்போது தமிழனாக மாற்றம் செய்து தீபாவளியை தமிழர்கள் கொண்டாடக் கூடாது என்று ஒருசிலர் அரசியல் செய்கின்றனர். புராணகாலத்தில் உலகம் முழுவதும் இந்துக்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர், மற்ற எந்த ஜாதியும் கிடையாது, எந்த நாடும், பிரிவினையும் கிடையாது. நரகாசுரன் தமிழன் என்றால் அவனை பெற்றவர்களும் தமிழர்களாகத்தானே இருக்கவேண்டும்)

நரகாசுரன் இறந்ததும் மக்கள் தீபமேற்றி அதனைக் கொண்டாடுவதை கண்ட சத்யபாமா கிருஷ்ணரிடம்...

“இப்படி ஒரு தீய மகன் தமக்கு பிறக்கக் கூடாது என மக்கள் நரகாசுரன் இறந்த நாளை தீபமேற்றிக் கொண்டாட வேண்டும்.”

“ஒருவர் இறந்தபின் செய்யும் எண்ணைக் குளியல் புனிதமாக்கப்பட வேண்டும்.”

“இன்றைய தினத்தில் செய்யப்படும் எண் ணைக் குளியலின் எண்ணையில் மகாலட்சுமி வாசம் செய்ய வேண்டும்.”

“இந்த நாளில் ஒவ்வொருவர் வீட்டுத் தண் ணீரிலும் கங்காதேவி எழுந்தருள வேண்டும்” என வரம் வேண்டி அதனைப் பெற்றுக் கொண் டார்கள். தீபாவளி அமாவாசை அன்று வருவதால் தீது பாவ வழி என்று அசைவ

**புராணகாலத்தில் உலகம் முழுவதும் இந்துக்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர், வேறு ஜாதி, மதம் கிடையாது, பிரிவினையும் கிடையாது. நரகாசுரன் தமிழன் என்றால் அவனை பெற்றவர்களும் அவனை கொன்ற தாயும் தமிழர்களாகத்தானே இருக்கவேண்டும்...**

உணவுகளை தவிர்த்து புத்தாடை, இனிப்பு வகைகள், பலகாரங்கள், நல்ல அறுசுவை சைவ உணவுடன் வீடு தோறும் விளக்கேற்றி கொண்டாடுவது தான் சிறப்பானதாக இருக்கும்.

பட்டாசு என்பது பண்டிகையின் இடையில் வந்த ஒரு குதுகலமாக இருந்தாலும், அதையும் நம் மதப் பண்டிகையுடன் இணைந்துக்கொண்டு

மற்றபடி தீபாவளியை வைத்து அரசியல் செய்யாமல், தீமைக்கு விடை கொடுத்து, நன் மைக்கு ஒளியைக் கொடுத்து வரவேற்கும் மிகப்பெரிய பண்டிகையாக ஒற்றுமையுடன், குழந்தைகள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியுடன் நன்மையை வரவேற்போம்.




அனைத்து ஆன்மிக செய்திகளையும் உங்கள் மொபைல், டேப் போன்றவற்றிலும் 24x7 மணிநேரமும் பார்த்து பயன்பெறலாம்

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர் Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்






# பட்டாசு வரலாறு



பட்டாசு உற்பத்தி 2000 ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் உருவாக்கப்பட்டது. சீனாவில் சமையலின் போது பயன்பட்ட உப்பு (பொட்டாசியம் நைட்ரேட் சேர்மம்) நெருப்பில் தவறி விழுந்துள்ளது. அப்போது எழுந்த திடீர் தீச்சுவாளைதான் பட்டாசிற்கு தேவையான கரித்தூளை கண்டறிய உதவியது. துவக்கத்தில் தீச்சுவாளையை உருவாக்க கரியும் கந்தகமும் பயன்பட்டுள்ளது. இந்த கலவையை மூங்கில் குழாயில் அடைத்து வைத்து பட்டாசாகப் பயன்படுத்தியுள்ளனர்.

சாங் பேரரசர் காலத்தில் (960–1279) லிடியான் என்னும் துறவியினால் பட்டாசு விரி வாக்கம் பெற்றது. இவர் லியு யாங் நகரின் அருகில் வாழ்ந்துவந்தார். சீன வருட பிறப்பு கொண்டாட்டத்தின்போது மூங்கிலில் கரித்தூள் அடைத்த இந்த பட்டாசுகள் தீய சக்திகளை அப்புறப்படுத்த வெடிக்கப்பட்டன. இந்த பழங்கால பட்டாசில் சத்தம் மட்டுமே வந்தது. உலகில் மிகுதியாக பட்டாசு தயாரிக்கும் நாடு சீனா உலக பட்டாசுகளில் 90 விழுக்காடு சீனாவில் தயாரிக்கப்படுகிறது.

## பட்டாசுகளின் பரவல்

சீனர்கள் மூங்கில்களையும், மரத்துண்டுகளையும், வெடி மருந்தையும் கொண்டு வானில் சீரிப்பாய்ந்து சென்று வெடித்த வாணங்களை உருவாக்கினர். 1279இல் சீனாவில் ஊடுருவிய மங்கோலியர்கள் இந்த தொழில் நுட்பத்தை கற்றுக் கொண்டனர். சீனாவுக்கு வந்துசென்ற ஆராய்ச்சியாளர்கள் இதை அறிந்துகொண்டு தங்கள் நாடுகளில் பரப்பினார்கள்.

## பட்டாசுகளின் வளர்ச்சி

1400களில் இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் நகரில் பட்டாசு உற்பத்தி துவங்கியது. பிரெஞ்சு பொறியியளாளரான அமேதி பிரென்சுவாஃபிரெசியர் எழுதிய டிரீட்ஸ் ஆன் ஃபயர் ஒர்க்ஸ் என்னும் புத்தகம் 1706 இல் வெளியிடப்பட்டது. அதன்பின் பட்டாசு தயாரிப்பவர்கள் இந்த புத்தகத்தை பின்பற்றியே தயாரித்தனர். தற்போது நாம் பயன்படுத்தும் வண்ணமயமான பட்டாசுகள் தயாரிப்பு 1830இல் துவங்கியது. பல வேதிப் பொருட்களை பயன்படுத்தி இத்தாலியர்கள் வண்ணமயமான பட்டாசுகளை தயாரித்தனர். ஏப்ரல் 18–ஐ பட்டாசு கண்டுபிடிக்கப்பட்ட நாளாக சீனாவில் கொண்டாடப்படுகிறது.

## சிவகாசி பட்டாசுகள்

1922இல் கல்கத்தாவில் ஜப்பானை சேர்ந்த சிலர் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். அப்போது இந்தியாவிலேயே கல்கத்தாவில் மட்டுமே தீப்பெட்டி தயாரிப்பு தொழில் நடைபெற்று வந்தது. அப்போது சிவகாசியிலிருந்து பி.ஐயன், ஏ.சண்முகம் ஆகியோர் தீப்பெட்டி தொழிலை கற்றுக்கொள்ள கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் இவர்கள் சிவகாசி திரும்பி 1928இல் தீப்பெட்டி தொழிற்சாலையை உருவாக்கினர். அதன் பின்னரே சிவகாசியில் பட்டாசு உற்பத்தி தொடங்கியது. இந்தியாவில் 90 விழுக்காடு பட்டாசு தயாரிப்பு சிவகாசியில் மேற்கொள்ளப்படுகிறது.

சீனாவில் தீமைகளை அழித்து நன்மை பிறக்கும் விழாவிற்காக அதிகம் பயன்படுத்திய பட்டாசு, இந்தியாவின் தீபாவளிக்கும் அதே காரணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.



# குளியலை மையயமாக வைத்துதான் தீபாவளி

தீபாவளி அன்று ‘கங்கா ஸ்நானம்’ மிக முக்கியம். சந்தேகம் இல்லை. ஆனால் அன்று கங்கா ஸ்நானம் மட்டும் கிடையாது. அன்று இரண்டு ஸ்நானங்கள் சொல்லியுள்ளது.

சனாதன ஹிந்து மதத்தில் பல பண்டிகைகள் உள்ளன. ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு புராண வரலாறு உண்டு. தனித்தன்மை உண்டு.அனைத்து பண்டிகைகளை ஆழ்ந்து பார்த்தால் ஏதாவது ஒரு ஆன்மிகம் கலந்த சமுதாய சிந்தனையும் ஒன்று அடிப்படை ஆதாரமாக இருப்பதை நம்மால் பார்க்க இயலும்.

எல்லா பண்டிகைகளும் ஒவ்வொரு தேவதா மூர்த்தியை அடிப்படையாக கொண்டிருக்கும் என்பதை நாம் அறிந்ததே. அந்த குறிப்பிட்ட தேவதா மூர்த்திக்கு அன்று விசேஷ பூஜை புனஸ்காரங்கள், நைவேத்யங்கள் சொல்லப்பட்டிருக்கும்..

உதாரணத்திற்கு சிவராத்ரி சிவனை மையமாகவும், வைகுண்ட ஏகாதசி திருமாலை ப்ரதானமாகவும், விநாயக சதுர்த்தி பிள்ளையாரை அடிப்படையாகவும், கிருஷ்ண ஜயந்தியில் கண்ண பிரானும், இராம நவமியில் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியும், நவராத்திரி பண்டிகையில் அம்பாள் ஸ்வரூபவத்தை ஆராதிப்பதாகவும், சங்கராந்தியில் ஸூர்யநாராயண ஸ்வாமியை பூஜிப்பதாகவும் அமைந்துள்ளதை நாம் நன்கு அறிவோம். அவ்வாறே ஒவ்வொரு பண்டிகைக்கும் வெவ்வேறு விதமான பக்ஷணங்கள் நைவேத்யமாக சொல்லப்பட்டுள்ளதும் நமக்குத் தெரியும்.

தீபாவளியை பொருத்தவரையில் எந்த குறிப்பிட்ட கடவுளுக்கும் பூஜை புனஸ்காரங்கள் சொல்லப்படவில்லை. தீபாவளிக்கு முக்கிய அம்சம் என்னைவெனில் ஸ்நானம் செய்வதே. குளியலை மையயமாக வைத்துதான் தீபாவளி இல்லம்தோறும் கொண்டாடப்படுகின்றது. தீபாவளி அன்று காலையில் நாம் அன்பர்களையும் நண்பர்களையும் சுற்றார்களையும் சந்திக்கும்போது ‘கங்கா ஸ்நானம் ஆச்சா.?” என்றுதான் கேட்கிறோம்.

தீபாவளி அன்று அதிகாலையில் எண்ணை தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். அன்று வெந்நீரில் அந்த முகூர்த்தத்தில் கங்கை வசிப்பதாக சாஸ்திரம் சொல்லுகின்றது. அதற்காகத்தாத்தான் இதற்கு “கங்கா ஸ்நானம்” என்று பெயர் வந்துள்ளது.

இந்த ஒரு ஸ்நானத்துடன் நிற்கவில்லை. அன்று மற்றுமொரு குளியலும் சொல்லியுள்ளது. அன்று காலை ஸூரியோதயத்திற்கு பிறகு 6 நாழிகைக்குள் (அதாவது சுமார் காலை 9 மணிக்குள்) காவேரி போன்ற நதிகளிலோ அல்லது குளத்திலோ அல்லது கிணற்றிலோ அல்லது குழாயடியிலோ குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த ஸ்நானத்திற்கு பெயர் “துலா ஸ்நானம்”.

முதலாவதாக செய்யும் கங்கா ஸ்நானத்தின்போது விஷ்ணு பகவானை ஸ்மரிக்கவேண்டும். இரண்டாவது குளியலின்போது பரமேஸ்வரனை நினைக்கவேண்டும் என பெரியோர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

### தீபாவளி சொல்லும் செய்தி:

கிருஷ்ணனால் நரகாசுரன் வதம் செய்யப்பட்டபோது, மரணத்தருவாயில் அவன் ஞானத்தைப் பெற்றான். “எனது தவறுகளுக்காக நான் துன்பம் அனுபவிக்கவே வேண்டும். ஆனால், எனது மரண தினத்தை மக்கள் எல்லோரும் சந்தோஷமாகவும் செழிப்புடனும் கொண்டாடவேண்டும்....” என்று கோரி இறப்பெய்தினான்.

நமக்கு தனிப்பட்ட வகையில் எத்தனையோ துன்பங்கள் இருப்பினும் கவலைகளோ குறைபாடுகளோ இருந்தாலும் சுற்றியிருக்கும் மனிதர்களையும் உயிர்களையும் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை ஒரு அசுரன் தனது மரணத் தருவாயில் உணர்ந்தான்.

ஒரு அசுரன் அத்தனை ஞான நிலையை எட்ட முடியுமானால் நாகரிகமடைந்த மனிதர்களால் இன்னும் மேலான ஆனந்தத்தைப் பிறருக்கு அளிக்க முடியும் என்பதை நினவுப்படுத்தும் பண்டிகையே தீபாவளி. நம்மை சுற்றி ஒளியேற்றுவோம்.

– கோபால சாஸ்திரிகள்
கீழ்கொடுவாலூர்,
வந்தவாசி,




ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 நவம்பர் 2018 31
www.aanmeegamalar.com

# நாமஜபம்

‘எந்த நாமஜபத்தை செய்வது?’ என்பது பற்றி தெரிந்து கொள்ளுங்கள்!

## 1. இஷ்ட தெய்வத்தின் நாமஜபம்

பலர் தங்களுக்கு பிடித்தமான தெய்வத்தை இஷ்ட தெய்வம் என கருதுகின்றனர். அப்படி ஒருவருக்கு தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் நாமஜபத்தை செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் அவர் அதையே செய்யலாம். இன்னும் ஒருவர் முன்பே ஒரு நாமஜபத்தை செய்து வந்திருந்தால் மற்றும் அதன் மூலம் ஏதாவது அநுபூதி கிடைத்திருந்தால் அவர் அந்த நாமஜபத்தையே தொடர்ந்து செய்யலாம்.



## 2. குலதெய்வத்தின் நாமஜபம்

குலதெய்வம் என்பது குலதேவி அல்லது குலதேவனைக் குறிக்கும். ஒருவருக்கு எந்த குலதெய்வத்தின் உபாசனை தேவையாக உள்ளதோ அந்த குலத்திலேயே அவர் பிறப்பார். இறுதி மூச்சு உள்ளவரை ஒருவருடன் கூடவே வரும் பிராரப்த கர்மாவின் தீவிரம் குலதெய்வ நாமஜபத்தால் குறைகிறது. குலதெய்வ உபாசனையால் ஒருவரின் வாழ்க்கையில் குரு வருகிறார் மற்றும் அவரின் வழிகாட்டுதலின்படி உண்மையான அர்த்தத்தில் மனிதனுக்கு இறைவனை நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது. சத்ரபதி சிவாஜி மகாராஜ், தன்னுடைய குலதேவியான ஸ்ரீ பவானி தேவியின் உபாசனையை செய்து வந்தார். அதன் மூலம் அவருக்கு சமர்த்த ராமதாஸ் சுவாமி குருவாக கிடைத்தார்.

### குலதெய்வ நாமஜபத்தை செய்யும் வழி

நீங்கள் ஒருவரை பற்றி குறிப்பிடும்போது அவரின் பெயரை மட்டும் கூறாமல் அதற்கு முன்னால் ஸ்ரீ, திருமதி, மாமா போன்றவற்றை சேர்த்து உங்களின் மரியாதையை தெரிவித்து கொள்கிறீர்கள். அதுபோல நீங்கள் குலதெய்வத்தின் நாமஜபத்தை மரியாதையுடன் செய்ய வேண்டும். குலதெய்வத்தின் பெயருக்கு முன்னாள் ‘ஸ்ரீ’ சேர்த்து, பெயருக்கு பின்னால் விகுதி சேர்த்து பின்பு ‘நம:’ சேர்த்து கூற வேண்டும். உதா. குலதெய்வம் கணபதியாக இருந்தால் ‘ஸ்ரீ கணேசாய நம:’ , குலதெய்வம் பவானியாக இருந்தால், ‘ஸ்ரீ பவானி தேவ்யை நம:’ எனவும் கூற வேண்டும்.

## 3. குலதெய்வம் தெரியாவிட்டால் எந்த நாமஜபத்தை செய்ய வேண்டும்?

குலதெய்வம் யாரென்று தெரியாவிட்டால், குடும்பத்திலுள்ள வயதானவர்கள், தூரத்து சொந்தங்கள், அதே ஜாதிக்காரர்கள், கிராமத்தில் உள்ளவர்கள், புரோஹிதர்கள் ஆகியோர் மூலமாக குலதெய்வத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். குலதெய்வத்தின் பெயர் தெரியாவிட்டால், இஷ்டதெய்வத்தின் பெயர் அல்லது ‘ஸ்ரீ குலதேவதாயை நம:’ என்று நாமஜபம் செய்யவும். அது பூரணமான பின்பு குலதெய்வத்தின் பெயர் தெரிந்தவர் நம்மை சந்திப்பார். குலதெய்வ நாமஜபம் பூரணம் அடைந்த பிறகு குரு தானாகவே நம் வாழ்வில் வந்து குருமந்திரத்தை தந்தருளுவார். உங்களுக்கு சத்ரபதி சிவாஜி மகாராஜின் உதாரணம் தெரிந்திருக்கும். அவர் குலதெய்வத்தின் பக்தராக இருந்தார். எப்பொழுதும் ‘ஜகதம்ப, ஜகதம்ப’ என்ற நாமஜபத்தை செய்தார். பிறகு அவரின் வாழ்வில் சமர்த்த ராமதாஸ் சுவாமி குரு ரூபத்தில் வந்தார்.

## 4. குரு அளித்துள்ள நாமத்தின் ஜபம்

யாருக்கு குரு மந்திரம் கிடைத்துள்ளதோ அவர்கள் அந்த குரு மந்திரத்தை ஜபிக்க வேண்டும். நம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு எந்த நாமஜபத்தை செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியாது. அதை குருவே நமக்கு கூற முடியும். குரு மந்திரத்தில் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அதிலுள்ள ஞானம், சைதன்யம் மற்றும் ஆசீர்வாதத்தால் விரைவில் முன்னேற்றம் ஏற்படுகிறது.

## 5. மூதாதையர் தரும் கஷ்டங்களிலிருந்து நிவாரணம் பெற தத்த நாமஜபம்

குலதெய்வ உபாசனை செய்வதோடு கூட ஒவ்வொருவரும் ‘அதிருப்தி அடைந்த மூதாதையரால் நமக்கு கஷ்டம் வரக் கூடாது’ என்பதற்காக ‘ஸ்ரீ குருதேவ தத்த’ என்ற நாமஜபத்தை தினமும் குறைந்தபட்சம் 12 மணி நேரமும் தீவிர கஷ்டம் இருந்தால் 46 மணி நேரமும் செய்ய வேண்டும்.

நாமசாதனையாக ஒவ்வொரு ஹிந்துத்வ வாதியும் ஒவ்வொரு நாளும் 3 மாலைகள் (ஒரு மாலை என்பது 108 முறை) இஷ்ட தெய்வம் அல்லது குலதெய்வத்தின் நாமஜபத்தையும் மற்றும் 3 மாலை ‘ஸ்ரீ குருதேவதத்த’ நாமஜபத்தையும் செய்ய வேண்டும். மீதியுள்ள நேரங்களில் காலத்திற்கேற்ற சாதனையாக ‘ஓம் ஓம் நமோ பகவதே வாசுதேவாய ஓம் ஓம்’ என்ற நாமஜபத்தை செய்ய வேண்டும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே தர்மஸன்ஸ்தாபனத்தின் தெய்வம், ஹிந்து ராஷ்ட்ர ஸ்தாபனம் என்பது தர்மஸன்ஸ்தாபன காரியமே. அதனால் இந்த காரியத்திற்கு தேவையான ஆன்மீக பலம் பெறுவதற்கு ஸ்ரீகிருஷ்ணனின் நாமஜபத்தை செய்வது மிகவும் அவசியமாகிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626


## ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033

# தன்னை உடம்பாக கருதுகிற மனிதன் குண்டலினி சக்தி வந்தபிறகு ஒளியாக தன்னை காண்கிறான்

குண்டலினி சக்தி என்பது ராஜா. அந்த ராஜா வாழுகிற அரண்மனை மூலாதாரம். அவரது வெற்றிக்கொடி பறக்கவேண்டிய சிகரம் சகஸ்ரம். மூலாதாரம் துவங்கி, சகஸ்ரம் வரையில் குண்டலினி ராஜா வீர நடைபோடுகின்ற ராஜ பாட்டைகள் உடம்பில் உள்ள சக்கரங்கள். அந்த சக்கரத்தின் வழியே குண்டலினி சக்தி ஒன்றிலிருந்து வேறொன்றுக்கும், வேறோன்றிலிருந்து மற்றொன்றுற்கும் கடந்து செல்வதை ஞானிகள் மரம் ஒன்றின் அடிக்கிளையில் இருந்து மேல் கிளை நோக்கி ராஜாளி பறவை பறந்து சென்று உட்கார்வதை உதாரணமாக காட்டுகிறார்கள். அதன் பயணத்தை இப்போது சிறிது சிந்திப்போம்.



குண்டலினி சக்தி மூலாதாரத்தில் சுவாதிஸ்தானம் என்ற நாபிக்கமலத்திலும், இயங்கும் போது தமோகுணம் பிரதானம் கொண்டதாக இருக்கிறது. இந்த நிலையில் குண்டலினியின் அதிர்வுகள் மனிதனின் உடலையும், மனதையும் உடம்பும், உடம்பும் இணைகிற சிற்றின்பத்தின் மீது நாட்டம் கொள்ள வைக்கிறது. இந்த நாட்டத்தின் அடிப்படையிலேயே பிரஜாவிருத்தி என்ற மனித சமூக வளர்ச்சி ஏற்படுகிறது. குண்டலினி அபானவாயுவை தூண்டி காம வாயுவாக செயல்பட வைக்கும் போது மனித உடம்பில் பிருத்வி தத்துவமும், அப்பு தத்துவமும் அதாவது நீரும், நிலமும் கலந்த சக்தி அக்னி மண்டலமாக செயல்படுகிறது.

மூலாதாரத்தின் அதிதேவதையாக பிரம்மதேவன் இருக்கிறார். இவர் கலைகளின் தலைவியான சரஸ்வதி தேவியின் நாயகர் சுவாதிஸ்டானத்தின் அதிதேவதை மகாவிஷ்ணு. இவர் அலைமகள் என்று அழைக்கப்படும் செல்வத்தின் தலைவி மகாலஷ்மியின் நாயகர். குண்டலினி சக்தியானது இந்த இரண்டு இடங்களிலும் சம்மந்தப்படும் போது மனிதனுக்கு அறிவையும், செல்வத்தையும் பெறுகின்ற வழியை ஏற்படுத்துகிறது. அறிவும், செல்வமும் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அது மனிதனை கீழ்நிலைப்படுத்துகிற தமோகுணத்தின் வடிவாகவே அறியப்படுகிறது. அவைகளால் பிறப்பற்ற நிலையை தருகின்ற நிகரற்ற பரம் பொருளை அடையச்செய்ய முடியாது.

செல்வம் என்பது உடம்பை வளர்ப்பது. அறிவு என்பது எண்ணங்களை வளர்ப்பது. எண்ணங்களை அடக்கி தேகத்தை கடந்து செல்லுகிற சுத்த மாயா தத்துவத்தின் மூலமே, பரம்பொருளை காணமுடியும். அதனால் தான்



குண்டலினி சக்தி மூலாதாரத்தில் இருந்தும், தொப்புள் மத்தியில் இருந்தும் மேல்நோக்கி கிளம்பவேண்டும். அப்படி கிளம்பினால் மட்டுமே யோக வாழ்க்கையின் முதற்படியை தாண்டமுடியும் என்று சித்தர்கள் கருதுகிறார்கள்.

குண்டலினி சக்தி மணிப்பூரகம், அநாகதம் ஆகிய சக்ரங்களை அடைந்து அங்கே இயக்க நிலையை துவக்குகிற போது ரஜோ குணமாக மாறுகிறது. இந்த நேரத்தில் காமத்தின் பாதையில் சென்று கொண்டிருந்த மனமும், உடம்பும் சற்று நின்று நிதானிக்கிறது. அழியப்போகும் உடல்மீது வைக்கின்ற ஆசை நமக்கு நிரந்தர சந்தோஷத்தை தருமா? நாடி தளர்ந்து வயது முதிர்ந்து தள்ளாட்டம் காணுகிற நேரத்தில் சிற்றின்ப நாட்டம் எந்த வகையிலாவது உதவி செய்யுமா? இத்தகைய காமக்களியாட்டம் தேவை தானா? என்று யோசிக்க வைக்கும். உடலில் சுரக்கும் இன்ப ஊற்றின் வேகம் குறைந்து இறை சிந்தனையானது உதயமாகிறது.

புலன்களால் அனுபவிக்கப்படும் ஆனந்தம் நிலையற்றது. ஒரு நீர்க்குமிழி எப்படி ஒரு நிமிடத்தில் சிதைந்து போகுமோ அதைப் போன்று உடல் இன்பமானது உடம்பில் பலம் தீர்ந்தவுடன் வியாதியாக மாறிவிடும். கடிவாளம் இல்லாத குதிரை பல இடங்களுக்கு ஓடி ஓடி கடைசியில் மூச்சு திணற அங்கு நிற்பது போல, புலன்வழிப்பட்ட ஆசையும், கடவுள் சிந்தனை என்ற எல்லையில் வந்து முடிவடைகிறது. மனம் அடங்கி செய்யப்படும் இக்காலத்திய தியானப் பயிற்சியில் தெய்வீக ஒலிகளும், உருவங்களும் காட்சிகளாக அணிவகுக்கின்றன. இப்போது ரஜோ குணத்தால் தூண்டப்பட்ட மூலவாயு




வாசியாக உருவம் பெற்று மேல் நோக்கி துருவ நிலையில் செயல் படத்துடிக்கிறது.

பிரளய காலத்து அதி தேவதையாகிய ருத்ரன் மணிபூரகத்தையும், உலக இயக்கத்தை கட்டு படுத்தும் தேவதையாகிய மகேசன் அநாதகத்தையும் ஆட்சி செய்கிறார்கள். இந்த இரண்டு சக்கரங்களில் வாயுவும், தேயுவும் அதாவது காற்றும், நெருப்பும் தத்துவங்களாக இருக்கின்றன.

மூலாதாரத்தில் இருந்து சுவாதிஸ்டானம் வழியாக மேலே இந்த சக்கரங்களில் வந்து உட்காரும் குண்டலினி சக்தி, மனிதனின் அசட்டைப்போக்கால் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே அதாவது கீழ்நிலைக்கே சென்றுவிட வாய்ப்புண்டு. இக்கால கட்டத்தில் சத்தியமும், உறுதியும், விடாமுயற்சியும் தேவை என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

குண்டலினி சக்தியானது விசுத்தி, ஆக்ஞா ஆகிய சக்கரங்களில் ஏறி இயங்கும் போது ஆகாய் தத்துவத்தை அடைகிறது. ஆக்ஞா மனோதத்துவத்தின் சிகரம். இங்கு சதாசிவத்தின் ஆட்சி நடைபெறுகிறது. விசுத்தி தேக சம்மந்தத்தை அறுந்து போக வைக்கிறது. ஆகாய தத்துவம் இங்கே மலர்கிறது. உருவங்கள் இல்லாத அருவத்தை நோக்கி தியானம் முன்னேறுகிறது. தன்னை உடம்பாக கருதுகிற மனிதன் குண்டலினி சக்தி இந்த இடங்களுக்கு வந்தபிறகு ஒளியாக தன்னை காண்கிறான். எங்கும் ஞான ஒளியே நிறைந்திருப்பதை பார்க் கிறான் தமோகுணம், ரஜோகுணம் ஆகிய இரண்டும் மடிந்து சத்வகுணம் மேலோங்கி நிற்கிறது. சத்வகுணத்தில் ஆத்மா வெற்றிக்களிப்பை அனுபவிக்கிறது. நடராஜா தத்துவத்தின் நிலையறிந்து இறைவனின் பாதங்களில் அமைதி காண் கிறது.

குண்டலினி சக்தி மனித உடம்பில் இந்த வகையில் தான் பயணம் செய்கிறது. ஒவ்வொரு பயணத்திலும் சக்கரங்களில் தங்கும் போது இந்த அனுபவங்களை தானும் பெற்று நம்மையும் பெற வைக்கிறது. இது குண்டலியின் பயணம். இது சித்தர்களின் முடிவு. இந்த பயணத்தை குண்டலினி சக்தி துவங்குவதற்கு என்ன செய்யவேண்டும்? அதன் வழிமுறைகள என்ன? என்று நம் முன்னே ஆயிரம் கேள்விகள் இருக்கிறது அவை அத்தனைக்கும் சித்தர்கள் பதிலைத் தெளிவாக கூறி இருக்கிறார்கள்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com





# முருகனின் சிறப்புகள்...

- முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ் சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- பொருள், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்கிற ஆறு குணங்களே ஆறுமுகம்.
- முருகன் அழித்த ஆறு பகைவர்கள்ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.
- முருகனைப் பூஜிப்பதால் சிறப்புப் பெற்ற தலம் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருவிடைக்கழி. இங்கு முருகப்பெருமானுக்குப் பின்புறம் சிவலிங்கம் உள்ளது. (குரா மரத்தடியில் முருகன் பூஜித்தது) அது போல் திருவேற்காட்டில் வேலமரத்தடியில் முருகன் பூஜித்த சிவலிங்கம் முருகனுக்கு முன்புறமாக உள்ளது.
- முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் மூன்றாகும்.
  1. சூரபத்மனை வதம் செய்தததுதிருச்செந்தூர்,
  2. தாரகாசுரனை வதம் செய்தது திருப்பரங்குன்றம்,
  3. இந்த இருவரின் சகோதரனான சிங்க முகாசுரனை வதம் செய்தது போரூர் ஆகும்.
- திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் மூலவரின் நெஞ்சில் சிறிய பள்ளம் இருக்கின் றது. சூரனை வதம் செய்யும் போது அவனோடு மோதியதால் இப்பள்ளம் ஏற் பட்டது.
- செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் அதிகாலையில் குளித்து முடித்துத் தூய்மையுடன் ஸ்ரீஸ்ரீசுப்பிரமண்ய அஷ்டகம் ஒத வேண்டும். இத னால் தோஷம் விலகி நன்மை உண்டாகும்.
- முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவையும் இருக் கும்.



www.aanmeegamalar.com

# மகாலக்ஷ்மி ஸ்லோகத்தினால் கிடைக்கும் நன்மைகள்...!

ஒரு ஊரில் ஒரு ஏழை பிராமண தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள்.வறுமை அவர்களை வாட்டிய நிலையில் நான்கு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு மிகுந்த இன்னல்களுக்கிடையே போராடிக் கொண்டிருந்தார்கள்.

நான்கு பெண் குழந்தைகளை எப்படி படிக்க வைத்து, திருமணம் செய்து கொடுக்கப் போகிறோம் என்ற அச்சம் அவர்களை அல்லும் பகலும் வாட்டியது. உண்ண உணவு, உடுத்த உடை கூட இன்றி வறுமையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமெனக் கழிந்துகொண்டிருந்தது. இந்த நிலையில் ஒரு நாள் அவர்களது வீட்டிற்கு ஒரு துறவி யாசகம் கேட்டு வர, அந்தத் தம்பதிகள் என்ன செய்வது என்று புரியாமல் ஐயோ! நம் வீட்டில் எதுவும் இல்லையே இவருக்கு பிக்ஷையிட என்று கலங்கி நிற்க அந்தத் துறவி அவர்களைப் பார்த்து உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது.உங்கள் நிலைமை மாற வேண்டுமானால் நான் சொல்லவதை செய்வீர்களா? என்றார்.அதற்கு அந்த தம்பதிகள் என்ன செய்ய வேண்டும் சுவாமி எங்களால் முடியுமானால் நிச்சயம் செய்கிறோம் என்று கூறினார்கள். அப்போது அந்தத் துறவி அவர்களைப் பார்த்து “நீங்கள் தினமும் காலையிலும், மாலையிலும் நான் சொல்லும் இந்த மந்திரமான

“ஓம், ஸ்ரீம், ஹ்ரீம், க்லீம்,
மகாலக்ஷ்மி, மகாலக்ஷ்மி,
யேகி,யேகி, சர்வ சௌபாகியமே
தேகி ஸ்வாஹா”

மகாலக்ஷ்மி பக்தியுடன் சொல்லி வாருங்கள் மந்திரத்தை 108 முறை.

அப்படிச் சொன்னால் உங்களுக்கு அந்த மகாலக்ஷ்மியின் கடாக்ஷம் கிடைக்கும். உங்கள் வறுமை நீங்கும், நான் சில காலம் கழித்து வருகிறேன்.” என்று கூறிவிட்டுச் சென்று விடுகிறார்.

அந்தத் துறவியின் அறிவுரைப்படி பிராமணரின் மனைவி தினமும் என்ற மந்திரத்தை 108 முறை உச்சரித்து வந்தாள்.அந்தத் துறவி கூறியது போல் அவர்கள் வீட்டில் மகாலக்ஷ்மி கடாக்ஷம் பெருகி அவர்களது நான்கு பெண்களுக்கும் திருமணம் செய்து வைத்து மிகுந்த செல்வத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அந்தத் துறவி மீண்டும் வந்து அவர்களின் வாசலில் நிற்க, அந்த தம்பதிகள் அவரது காலில் விழுந்து வணங்கி, அவரை உள்ளே அழைத்து வந்து விருந்து உபசரித்து, சுவாமி! நீங்கள் கூறியது போல் அந்த மகாலக்ஷ்மி ஸ்லோகத்தை நான் விடாமல் தினமும் சொல்லி வருகிறேன். இப்பொழுது நங்கள் செல்வச் செழிப்போடும், மிகுந்த சந்தோஷத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றார்கள். துறவியும் அவர்களை ஆசீர்வதித்துச் சென்றார்.







மகாலக்ஷ்மியின் பூரண கடாக்ஷத்தைப் பெற:

இன்றைய காலகட்டத்தில் வருமானத்திற்கு ஏற்ப செலவுகளும் வருவதால் செல்வத்தைக் கட்டிக் காப்பது அவசியம். இப்படிப்பட்ட நிலைமையில் நாம் இவ்வாறு மகாலக்ஷ்மியின் மந்திரத்தைச் சொல்லி வருவோமானால் நம் வீட்டில் மகாலக்ஷ்மி குடி கொண்டு அனுக்ரஹம் செய்வாள். செல்வத்தை வரவழைக்கவும், வந்த செல்வத்தை தக்கவைத்துக் கொள்ளவும் இந்த மந்திரத்தை சொல்லி நல்ல பல செல்வங்களைப் பெற்று வாழுவோமாக.

இந்த மந்திரத்தை சொல்வதனால் நாம் மகாலக்ஷ்மியின் பூரண கடாக்ஷத்தைப் பெற்று வாழலாம்.தினமும் சொல்லி வருவதால் பல நன்மைகள் உண்டாகும்.

மகாலக்ஷ்மி மந்திரத்தை சொல்லும் முறை:

இந்த மகாலக்ஷ்மி மந்திரத்தை மிகவும் கவனமாக, உடலும் உள்ளமும் சுத்தமாக வைத்து பூஜை அறையில் உட்கார்ந்து, யாரிடமும் பேசாமல், கண்களை மூடிக்கொண்டு மகாலக்ஷ்மியை மனதில் நினைத்து 108 முறை சொல்லவேண்டும். மகாலக்ஷ்மிக்கு உகந்த நாளான வெள்ளிக்கிழமைகளில் வீட்டு வாசலில் மாக்கோலம் இட்டு, வீடு முழுவதும் சம்பராணி, தூபம் போட்டு, குத்து விளக்கு ஏற்றி பின்பு கிழக்கு திசை நோக்கி அமர்ந்து இதைச் சொல்வது நல்ல பலனைத் தரும்.

– ஜெ.ஜெயப்ரியா
கண்ணாபட்டி, திண்டுக்கல்
Cell: 07538835792

## முருகனின் சிறப்புகள்...

- பிரமசரியகிருகஸ்தசந்நியாசக் கோலங்களில் முருகனை மட்டுமே காண முடியும். பிற கடவுள்களுக்கு இல்லாத சிறப்பு இது.
- தமிழகத்தில் முருகனுக்குக்குடவரைக் கோயில்கள் உள்ள இடங்கள் கழுகுமலை, திருக்கழுக்குன்றம், குன்றக்குடி, குடுமியான்மலை, சித்தன்னவாசல், வள்ளிக் கோயில், மாமல்லபுரம்.
- முருகக் கடவுளின் அடையாளப் பூ காந்தள் மலர்க் கண்ணியாகும்.
- கந்தர் சஷ்டித் திருவிழா வேதியர், சைவர், முனிவர் ஆகிய பெருமக்கள் எல்லாரும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாடி வரும் திருவிழா ஆகும்.
- தமிழ் மண்ணில் முருகன் குறிஞ்சி நிறக் கடவுள் என்றும், செந்நிற மேனியன், சேவற்கொடியோன், சூரியனுக்கு ஒப்பானவன் என்றும் பேசப்படுகின்றார்.
- பசிபிக், சிஷில்ஸ், பிஜி, மடகாஸ்கர் நாடுகளிலும் முருகன் வழிபாடு உள்ளது.
- மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றோரு பெயர் உள்ளது.



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.